தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உக } பார்த்திப—கார்த்திகை 1945—நவம்பர் { மலர் அ

வரலாற்றுப் பகுதி
இரண்டாம் உலகப் பெரும்போர்

(முற்றொடர்ச்சி: துணர் 21, மலர் 7, பக்கம் 168)

பிரித்தானிய முதலமைச்சராக விருந்த 'நெவிலிசேம்பர்லேன்' அவர்கள் அமைச்சர் பதவியி னின்றும் விலகிக்கொண்ட பின் 'வின்ஸ்டன் சர்ச்சில்' அவர்கள் பிரித்தானிய முதலமைச்சராயமைந்து பணியாற்றியபொழுது பிரித்தானியப் பேரரசின் நிலைமையை ஒருநாள் விளக்கி மொழிந்தார்கள். "1940-ல் நம்மிடம் நூறு போர்முனைப் பீரங்கிகளும் இருபது டாங்கிகளுமே இருந்தன. நம் வான வூர்திப் (விமானப்) படையை அடித்துத் தள்ளிவிட்டு நம் நாட்டின் மேற் படையெடுத்து வெற்றி பெறலாம் என இட்லர் எண்ணினார். அவர் எண்ணம் மண்ணாகு முறையில் விமானங்களைக் கட்டி விமானப் படையைப் பெருக்கினோம். அமெரிக்காவிலிருந்தும் விமானங்கள் வந்தன. விமான எதிர்ப்புப் பீரங்கிகளைக் கொண்டு பகைவனின் விமானங்களைச் சுட்டு வீழ்த்தினோம். தேசத்தின் உயிரைக் காப்பாற்றினோம். இன்று இருபது நாடுகளுக்கு மேல், ஏன்? உலக நாடுகள் முழுமையுமே நம்முடன் சேர்ந்து நிற்கின்றன." என வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் விளக்கி விளம்பினார்கள். இவ் விளக்க வுரைகள் பலர்க்கு வியப்பினையும் சிலர்க்கு நடுக்கத்தையும் விளைத்தன. தங்கள் நிலை எவ்வளவு திடுக்கிடக்கூடிய தன்மையிலிருந்தாலும் உலகினர் முன் உள்ள நிலையை உள்ளவாறு எடுத்துக் காட்டி, தங்கள் தவறுகளையும் உள்ள குறைகளையும் ஒப்புக்கொண்டு, திருத்திக் கொண்டு மேலும் முயற்சித்து மக்களுக்கு ஊக்கமூட்டி வென்றிக்கு வழி வகுப்பதில் வெள்ளையர் மிக மிக வல்லமை யுடையவர். இம் முறையிலேயே சர்ச்சில் அவர்களும் செயலாற்றி வென்றி கண்டார்கள். ஆறு ஆண்டுகட்கு முன் இட்லரே உலகிற் றலைசிறந்த படை வீரராக விளங்கினார். பிரெஞ்சு நாட்டைச் சில திங்களில் அடிப்படுத்திய இட்லர் அந் நாட்டின் மீது பற்றுக் கொண்டிருந்த அந் நாட்டு வீரர்

களையும் இளைஞர்களையும் அடக்கிக் கொடுமை படுத்தி அடிமையாக்கினர். அடங்காதாரைச் சுட்டு வீழ்த்தினர். அந் நாட்டிலிருந்து தம்மை ஆதரிக்கும் முதியவர்களோடு நட்புக்கொண்டு அவர்களோடு போர் நிறுத்த உடன்பாடு செய்து கொண்டார். அங்ஙனம் உடன்பாடு செய்து கொண்ட பின் பிரெஞ்சு நாட்டிற்குப் பெட்டெயின் அவர்களைத் தலைவராக்கிப் போலி ஆட்சியை நிறுவினர். இட்லரின் போலி ஆட்சிக்குத் துணை நின்று உதவியவர்கள் பெட்டெயின் அவர்களும் 'லவால்' அவர்களு மாவார்கள். இவர்கள் நிலைமையைக் குறித்துப் பின்னர் விளக்குவேம்.

இட்லர், போலந்து நாட்டினின்றும் 'பெஸ்ஸரேபியா' வைப் பிரித்து 'ருமேனியா' விற்குத் தந்து, ருமேனியாவைத் தம் பக்கத்தினின்று துணை புரியும் நாடாக்கினர். ருமேனியாவினின்றும் 'டிரான்சில்வேனியாவை' ப்பிரித்து ஹங்கேரிக்குத் தந்து அந் நாடும் தம்மை ஆதரிக்கும் வண்ணம் செய்து கொண்டார். யுகோஸ்லாவியாவின்று சில பகுதிகளைப் பிரித்தும், கிரீஸினின்று சில பகுதிகளைப் பிரித்தும் பல்கேரியாவிற்குத் தந்து அந் நாடும் தம்மை ஆதரிக்க வழி செய்தார். டென்மார்க்கிற்குக் காதலுரைகளை வழங்கியும், பெல்ஜியம் ஹாலந்தை வலிந்து பற்றியும் தம்மை ஆதரிக்கும் வண்ணஞ் செய்தார். ஐரோப்பாவில் 'ஸ்பெயின்' ஸ்வீடன், துருக்கி, ஸ்விட்ஜர்லாந்து என்ற நான்கு நாடுகள் நீங்கலாக மற்றைய நாடுகளை எல்லாம் வென்று அடிப்படுத்தி வென்றி வீரராகக் காட்சி யளித்தார். இந் நாடுகளிலும் ஸ்பெயினில் தம் ஆதரவு பெற்று ஆட்சிக்கு வந்த பிராங்கோவின் ஆட்சி நிகழ்வதால் தமக்கொன்றுங் குறைவில்லை யென எண்ணினர். துருக்கியும் ஸ்வீடனும் நடு நிலைமையில் நிற்பதாக அறிவித்திருந்தமையால் அவற்றை அடக்கும் பணியில் இட்லர் இரங்கா தொழிந்தார். இங்ஙனம் ஐரோப்பா முழுமையும் தம் ஆணை செல்ல விளங்கிய இட்லர் தமது ஐரோப்பியக் கோட்டையை ஒருவருந் தகர்க்க வியலாதென மனப்பால் குடித்தார். அமெரிக்கரும், பிரித்தானியரும் ஐரோப்பாவில் கால் வைத்தால் இரண்டு மணி நேரத்தில் அவர்களைக் கடலுக்குத் துரத்தி விடுவதாகவும் வீண் பெருமை பேசினர். இங்ஙனம் பேசிய இட்லர் இவற்றேடும் அமையாது 'வி. 1;' 'வி. 2;' என இது வரையிற் கண்டறியாத ஆளின்றிச் சென்று குண்டு வீசி நாட்டை அழிக்கும் கருவிகளாய விமானங்களை ஏவி இலந்தன் மாநகரைத் தாக்கினர். இத் தாக்குதலால் இலந்தன் மாநகரில் வேலைப்பாடமைந்த பண்டைக்கால, சிற்ப ஓவியங்களைக் கொண்டு மிளிர்ந்த எண்ணற்ற மாடங்களும் பெரும் பெரும் நிலையங்களும் இடித்துத் தள்ளப்பெற்று அழிந்தொழிந்தன. பிரித்தானியர் உளந்தளராமல் இவ் விமானங்களையும் எதிர்த்துச் சுட்டு வீழ்த்தினர்.

அமெரிக்கத் தலைவர் பதவிக்கு ரூஸ்வெல்டோடு போட்டியிட்டவரும், "ஒரே உலகம்" எனுஞ் சிறந்த நூலை எழுதிப் புகழ்கொண்டவரும், மனிதனுக்கு அரசியல்சுதந்தரமும் பொருளாதார சுதந்தரமும் இன்றியமையாதவை என இயம்பியவரும் ஆகிய "வெண்டல் வில்கி" அவர்கள், இவ் 'வி. 1.' "வி. 2;" குண்டுகளால் விளைந்த அழிவுகளைக்

கண்டு உளங்கசிந்து கண்ணீர் சிந்தினர். இவ் "வி. 2;" வாண வெடியைப்போல் வானத்தில் 60-மைல் உயரம் பாய்ந்து செல்லுந்தன்மையது. மணிக்கு 300-மைல் வேகத்தில் குறித்த இலக்கின்மேல் கீழே விழுந்து அழிவு வேலையைச் செய்யக்கூடியது. இக்கருவியைச் செருமானியிலிருந்து அமெரிக்காவுக்குக் கூட அனுப்ப இயலுமென் றெண்ணினர். இக்கொடிய கருவியைத் துணிந்து செலுத்திய இட்லரின் கொடுஞ் செயல்களைக் கண்டும் சர்ச்சில் அவர்கள் உளந்தளராது மக்களுக்கு ஊக்கமூட்டும் மொழிகளை வழங்கினர்கள். வஞ்சந் தீர்த்துக்கொள்ளுதல் என்ற சொல்லின் (Vengeance) சுருக்க எழுத்தின் பெயர் தாங்கிய இவ் " வி I. " " வி II. " எனுங்கொடிய கருவிகளை இதுபோது செருமானியர் நம் நாட்டின்மேல் செலுத்தித் தாக்குகின்றனர். செருமானியர்க்குத் தாங்கள் தோற்கப் போவது உறுதியாகத் தெரிந்துவிட்டது. இங்ஙனம் தோல்வி மனப்பான்மை படைத்த செருமானிய மக்களிடம் நம்பிக்கையை உண்டாக்குதற்காக இந்த அழிகருவிகளை உபயோகிக்கும் வண்ணம் தம்படையாளர்கட்கு இட்லர் ஆணையிட்டுள்ளார் ; என மொழிந்தார். இங்ஙனம் கொடுங் கருவிகளைக்கொண்டு தாக்கியும் இங்கிலாந்து அழிவுறாமல் எதிர்த்துத் தாக்குதலைக் கண்ட இட்லர் இங்கிலாந்தைத் தாக்குதலை நிறுத்தி உருசியாவைத் தாக்கி ஒழிக்க எண்ணினர். 1941-ஆம் ஆண்டு சூன் இருபத்திரண்டாம் நாளன்று ருமேனியா, பின்லாந்து பல்கேரியா, ஹங்கேரி முதலிய நாட்டினரின் உதவியுடன் இட்லர் உருசியாவைத் தாக்கினர். உருசியாவின்மேல் போர்தொடுத்து எழுபத்தெட்டு நூறுயிரம் செருமானியப் போர் வீரர்களையும், எழுபதினுயிரம் டாங்கிகளையும், அறுபதினுயிரம் போர் விமானங்களையும் ஒன்பதினுயிரம் துப்பாக்கிகளையும் வீர உருசியரிடம் பறிகொடுத்தார். இப்பேரிழப்பே இவர் தோல்வியை உறுதிப்படுத்திய தென்னலாம். இவ்விரண்டாம் உலகப் பெரும் போர்க்குத் தலைசிறந்த காரணர்களாயிருந்த இருவருள் இட்லரின் செயல்குறித்துத் தொடர்ந்து வரைந்து விளக்கியுள்ளேம். இவருடன் ஒன்றி நின்று செயலாற்றிய பெனிட்டோ முசோலினி அவர்களும் இவ்வரலாற்றில் இடம்பெற்றுள்ளார்கள்.

" சுடெட்டன் " பகுதி தமக்கு வேண்டுமென இட்லர் வேண்டினர் என்பதனை முன்னரேயே சுட்டி விளக்கியுள்ளேம். அப்பகுதியை இட்லர் எதிர்ப்பின்றிக் கைப்பற்றினர். அங்கிலப் பகுதி செய்தி குறித்து முசோலினி இட்லருக்குச் செய்த உதவியைப் பாராட்டுவான் வேண்டி, முசோலினியை இட்லர் மியூனிச்சிற்குவரவழைத்து விருந்து நடத்தினர். 1939-ஆம் ஆண்டில் செக்கோஸ்லோவேகியாவை இட்லர் கைப்பற்றியதைக் கண்டும் தடை சொல்லாமல் முசோலினி ஆதரித்து நின்றதற்கு மகிழ்ச்சி பூத்த இட்லர் இவ்வுதவியை ஒரு நாளும் மறக்கமாட்டேனென முசோலினிக்குக் கம்பிவழிச் செய்தியனுப்பினர்.

இத்தாலியின் தலைநகராகிய உரோமாபுரி பலவாறுய வரலாற்று நிகழ்ச்சிகட்கு இடனுயுள்ளது. " சீசர் " காலத்திற்கு முன்பிருந்தே

உரோமாபுரி ஆட்சியுச்சியின் அடையாளமாய்இலங்கியது. பேராட்சியின் நிலைக்களனுய் ஒரு காலத்தில் திகழ்ந்தது. ஒன்றுபட்ட இத்தாலியின் தலைநகரமாகவும் உரோமாபுரி ஒளிர்ந்தது. உலகக் கத்தோலிக்க மதகுருவின் தலைமைப் பதவி இந்நகரில் அமைந்துளது. "சென்றேன்! கண்டேன்!! வென்றேன்!!!" என முழங்கிய வீரன் "ஜூலியஸ் ஸீச"ரும், அந்நகர் தீப்பிடித்தெரியும் பொழுது பிடிலையெடுத்து முழக்கிக்கொண்டிருந்த "நீரோ" மன்னரும், அந்நகர வரலாற்றில் இடம்பெற் றுள்ளனர். இங்ஙனமே உரோமாபுரியி னின்றும் பல நாடுகளுக்குஞ்சென்று பல நாடுகளைவென்று அடிப்படுத்தி வென்றிக் கொடி நாட்டிய இத்தாலிய வீரர்களும், இப்போரில் பிரித்தானிய அமெரிக்க இந்தியப் படை வீரர்களின் முன் நிற்கலாற்ருது புறமுதுகிட்டுக் கால் மண் முதுகில்பட ஓடிய இத்தாலியப் படை வீரர்களும் நம் அகக்கண்முன் காட்சி யளிக்கின்றனர். உரோமாபுரி அழிவில்லாத அமர நகரமெனக் கூறுவர். இந்நகரம் இவ்விரண்டாம் உலகப் பெரும்போரில் அழிந்து படுமோ வெனப் பலரு மஞ்சினர்.

"உரோமாபுரிமீது எவன் குண்டுவீசி யழிக்க முயற்சிக்கின்ருனே அவன், தாயைக் கொலை புரிந்த அழியாப் பழியைத் தேடிக் கொண்டவனுவான்" என, கத்தோலிக்க மதத்தின் தலைமைப் பதவியி லமர்ந்துள்ள உரோமாபுரிப் போப்பாண்டவர் அவர்களும் அறவுரைகூறி அச்சுறுத்தினுர்கள். இவ்வச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது அச்சு நாட்டினர் இத்தாலியிற் றங்கிப் போருடற்றிக் கொடுமை விளைத்தனர்.

6—6—1944-ஆம் நாள் உரோமாபுரி அச்சு நாட்டினரின் பிடியினின்றகன்று, நேச நாட்டார் ஆட்சிக்குட்பட்டது. இரு எதிரிகளின் தலை நகரங்களுள் ஒரு எதிரியின் தலை நகராகிய உரோமாபுரியை நேச நாட்டார் போராடிப் பிடித்துக் கொண்டனர் என்ற செய்தி காட்டுத் தீயைப்போன் றெங்கும் பரவியது. இத்துடன் எதிரிகள் இத்தாலியில் ஒரு பகுதியை இழந்து விட்டனர். இத்தாலியில் பாசிச இயக்கத் தலைவராய் அமைந்து பல்லாண்டுகள் ஆட்சி நிகழ்த்திய முசோலினியின் வாழ்விற்கும் முடிவேற்படும் போலத் தோன்றியது. 1914-ஆம் ஆண்டு இத்தாலியிலிருந்த அபேதவாதக் கட்சியினின்றும் முசோலினி விலக்கப்பட்டார். அன்றிலிருந்து பாசிச இயக்கம் வளர்ச்சியடைந்தது. 1920—22-ல் உலகப்பொருளாதார நெருக்கடியினுல் இத்தாலியில் மக்களுக்கேற்பட்டிருந்த வெறுப்பைப் பயன்படுத்தி, தம் கட்சியையும் நிலைபெறச்செய்து முசோலினி வளர்த்து வந்தார். 1922-ஆம் ஆண்டின் கடைசியில் "காடைய"ரின் உதவி கொண்டு உரோமாபுரிக்குச்சென்று போர்வீரர்கள் செயலற்றுநிற்க அரசாங்கத் தலைமைப் பதவியை யேற்ருர். 1923-ஆம் ஆண்டிலிருந்து 1933-வரையிற் போர் வீரர்களையும், கடற்படைகளையும், விமானப் படைகளையும் பெருக்கி வன்மைபெறச் செய்தார். 1935-ல் அபிசீனியாவின்மீது படையெடுத்தது, அந்நாட்டிற் கிறித்துவ நாகரிகத்தைப் பரப்புதற்கே எனப் போலியாகக்கூறி அந்நாட்டைவென்று பாசிச

ஆட்சிக்கு உட்படுத்தினர். அபிசீனிய மன்னராய ஹெயிலிஸெலாஸி, முசோலினி தம் நாட்டின்மீது நியாயமின்றிப் போர்தொடுத்ததைச் சுட்டிக்காட்டி உலக மக்களின் முன் முறையிட்டார். அவர் முறையீட்டைக் கேட்டுங்கேளாதார்போன்று வல்லரசாளர்கள் வாய்வாளா திருந்தார்கள். தம்முறையீடு பயன்தரவில்லையாகையால் அபிசீனிய மன்னர் அபிசீனியாவினின்றும் தப்பிச்சென்று இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்தார். அபிசீனியாவில் வென்றிகண்ட முசோலினி அல்பேனியாமீது கிறித்துவப் பெருநாளன்று படையெடுத்தார். 1940-ஆம் ஆண்டு வீட்சியுற்ற பிரெஞ்சின்மீது போர் தொடுத்தார். இத்தகைய நிலைமையிலிருந்த முசோலினி 1943-ஆம் ஆண்டின் இடைக்காலத்தே, சர்வாதிகாரப் பதவியினின்றும் தள்ளப்பெறும் நிலைமையில் தாமே அப்பதவியினின்றும் விலகும்படியான நிலைமையை யடைந்தார். நிலைமையை யுணர்ந்து அப்பதவியினின்றும் விலகியுங்கொண்டார். இவர் பதவியி னின்றும் விலகியவுடன் இவர்மீதும், இவர் பாசிசக் கட்சியின்மீதும் வெறுப்புக் கொண்டிருந்த அந்நாட்டு மக்களால் இவர் பிடிக்கப்பெற்று, சிறையிடப்பட்டார். இவரைப் பிடித்துச் சிறைக்கோட்டத்தி லடைத்திருந்தனர். இங்ஙனம் சிறைக் கோட்டத்தி லடைக்கப்பட் டிருந்த தம் நண்பராகிய முசோலினியின் வருந்தத்தக்க நிலைமையையுணர்ந்த இட்லர் தம் ஒற்றர்களை வானவூர்திப் படையினின்றும் இத்தாலியில் இறக்கி இவரைச் சிறையினின்றும் விடுவித்தார். "இட்லர் காப்பாற்றுவாரென எதிர்நோக்கி யிருந்தேன்; அங்ஙனமே சிறைவிடுத்து என்னைக் காப்பாற்றினர்;" என முசோலினி மொழிந்தார்.

இத்தாலியிற் போருடற்றி வென்றியுடன் மீளும் படைவீரர்களை நேரிற் கண்டு ஊக்கி வரச்சென்ற பிரித்தானிய முதல் அமைச்சராயிருந்த சர்ச்சில் அவர்கள், இனி இத்தாலியில் எத்தகைய உரிமையுடன் மக்கள் வாழ வேண்டுமெனுங் கருத்தினைச் சில சொற்றொடர்களால் விளக்கினர்கள். உரிமை (சுதந்தரம்) என்றால் என்ன? எனும் வினவினை எழுப்பி அதற்கு விடையும் இறுத்தார்கள். மக்கட்கு உரிமை இருக்கிறதா? இல்லையா? என்னும் செய்தியை அறிதற்குப் போரில்லாக் காலத்தில் சில அளவு கருவிகளைக்கொண்டு அறியலாம் என்று சர்ச்சில் அவர்கள் முதலிற் கூறினர்கள். அவ்வளவு கருவிகளைக் குறித்து விளக்குங்கால் கீழ் வருமாறு குறிப்பிட்டு விளக்கினர்கள்.

"1. மக்கள் தங்கள் கருத்துக்களை ஒளி மறைவின்றி வெளியிட்டுரைக்க உரிமை யிருக்கிறதா?

2. பதவியிலிருக்கும் அரசியலாட்சியாளர்களிடங் காணப்படுங் குறைபாடுகளை வெளிப்படையாக எடுத்துக் கூறிப் பொது மக்கள் எதிர்த்தற்கு அரசியலில் உரிமை இருக்கிறதா?

3. மக்களின் விருப்பங்களை வெளியிட்டுரைத்தற்குச் சட்ட சம்பந்தமான ஏற்பாடுகள் அவ்வரசியலில் இருக்கின்றனவா?

4. மக்கள் தாங்கள் விரும்பாத அரசியற் றலைவர்களைப் பதவியி னின்றும் விரட்டுதற்கு உரிமை யிருக்கிறதா?

5. எந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சியுடனும் சேராமல் மக்கட் கூட்டம் திங்கிழைக்குமே என்னும் பயமிராமல் நீதிமன்றங்கள் (Courts) நியாயம் வழங்குகின்றனவா?

6. ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துங் கட்சியின் ஆணை குறுக்கிட்டுத் தடை செய்தற்கு வழியில்லாமல் நீதி வழங்க நீதி மன்றங்கட்கு உரிமை யிருக்கின்றனவா?

7. இந் நீதி மன்றங்கள் நியாயத்தையும், நேர்மையையுங் கடைப் பிடித்து விரிவான கொள்கைப் படியுள்ள உறுதிப்பாடான, வெளிப் படையான சட்டங்களை ஆட்சி புரிகின்றனவா?

8. செல்வர்கட்கு வழங்குகின்ருற் போல எளியவர்கட்கும், அரசிய லாட்சி யாளர்கட்கு வழங்குகின்ருற் போலப் பிறர்க்கும் இந் நீதி மன்றங்கள் நீதி வழங்குகின்றனவா?

9. தேசத்தின்பாலுள்ள கடமைகட் குட்பட்டுத் தனிமனிதனின் உரிமைகள் நிலைநிறுத்தப் படுவதுடன், வற்புறுத்தப்பட்டு உயரிய நிலைமைக்குக் கொண்டு வரப்படுமா?

10. நாசிச அல்லது பாசிசக் கட்சிகளைப் போன்ற ஓரே கட்சி ஆட்சிக்கு உட்பட்ட மறைமுகச் சேவகன் (C. I. D. Police) தம் தோள் மீது கைவைத்து நியாயமான அல்லது வெளிப்படையான உசாவுதலில்லாத காவலில் வைத்துத் துன்புறுத்துதற்காக அழைத்துப் போய் விடுவானே என்ற அச்சமில்லாமல் எளிய உழவனே ஏனைய தொழிலாளியோ தம், முயற்சியால் உழைத்துப் பொருளீட்டுதற்கு இயலுகிறதா?

இத்தகைய எளிமையான நடைமுறையில் நிகழுதற்கேற்றவை யான அளவு கருவிகள் தாம் இத்தாலியின் உரிமை சாசன அடிப் படையில் சேர்ந்திருக்க வேண்டும்." என, சர்ச்சில் அவர்கள் விளக்கினுர்கள்.

இவ் விளக்கவுரைகள் எக்காலத்திற்கும், எவ்வரசியற்கும் எந் நாட்டிற்கும் இன்றியமையா உரைகளாதலின் இவற்றை உலகம் பொன்னெழுத்துக்களால் பொறித்துப் போற்றுங் கடப்பாடுடையது. சர்ச்சில் அவர்கள் இத்தாலியிலிருந்து திரும்பிய பின் 7—6—'44-ஆம் நாள் இரண்டாம் போர்முனை குறித்த செய்திகளை வெளியிட்டார். நேச நாட்டினர் நாலாயிரங் கப்பல்களுடனும், பதினேராயிரம் விமானங்களுடனும் 'நார்மண்டி' யிலிறங்கிப் போர் நிகழ்த்தினர். இப் போராட்டம் இதுவரையில் உலகம்கண்டும் கேட்டுமிராத முறை யில் நிகழ்ந்தது. கரிய நீர்க் கடலில் சிந்தப்பெற்ற செங்குருதி கருங் கடல் நீரையே செந்நீராகுமாறு மாற்றிவிட்ட தென்ருல், மக்களுடல் துண்டாக்கப் பெற்றுத் தண்ணீரில் துண்டு துண்டாக மிதந்தன வென்ருல் இப் போரின் கொடுமையையுங் கடுமையையும் எங்ஙனம்

எடுத்துரைக்க வல்லேம்? பகைவர்களால் வீசப்பெற்றிருந்த கடற் கண்ணிகளைப் பொருட்படுத்தாது அக் கண்ணிகளை அகற்றிக்கொண்டு சென்று தாக்கிப் போரில் வென்றி கொணர்ந்த பிரித்தானிய அமெரிக்கப் போர்வீரர்களின் போராற்றலை என்னென்பேம்! என்னென்பேம்!!

ஐரோப்பா கண்டத்தைக் காட்டினும் பன்மடங்கு பெரிய கண்டமாய அமெரிக்காவின் இயற்கை வளங்களையும் செயற்கை வளங்களையும் இப்போர் வென்றிக்கே அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் அவர்கள் பெரிதும் பயன்படுத்தினார்கள். இதனோடன்றி அமெரிக்கப் போர் வீரர்களையும் போர்க்களத்திற் கனுப்பிப் போரடச் செய்தார்கள். இத்தலைவரின் முழு உதவியும் பிரித்தானியர்க்கும், உருசியர்க்கும் கிடைக்கவில்லை யாயின், நாசி ஆட்சி ஐரோப்பா முழுமையுமேயன்றி உலக முழுமையுமே நாட்டப்பெற் றிருக்குமன்றோ?

இரண்டாம் போர்முனைப் படையெடுப்பைத் தடுத்துவிடச் செருமானியர் அரண்களமைந்த "அட்லாண்டிக்கு மதிற்சுவர்" அமைத்திருந்தனர். இம்மதில், ஹாலந்து பெல்ஜியத்திலிருந்து கரையோரமாகப் 'பிரீனீஸ்மலை' வரை இருநூற்றைம்பது மைல் நீளமுடையதாயிருந்தது. மேலும் மூந்நூற்று நாற்பதுமைல் நீளமுடையதாய் விரிந்து பிரெஞ்சு மத்தியதரைக் கடற்கரை நெடுகவும் படர்ந்தது. இத்தகைய அரண்மயமான அட்லாண்டிக்கு மதிற்சுவரின் பற்களை முறித்துத்தள்ளித் துகளாக்கிக் கரையேறிப் போருடற்றிய பிரித்தானியர்அமெரிக்கரின்போர்த்திறனை எங்ஙனம் புகழ்ந்துரைக்க வல்லேம்? நேசநாட்டாரின் கடற்படை, விமானப்படை, சூறுவளிப் படை இவற்றின் வியப்பிற்குரிய சாதனையன்றோ இம்மதிலரண் கடந்தசெயல்!! இங்ஙனம் இவ்வரணைக்கடந்து இரண்டாம் போர் முனையில் வென்றி காணப் போராடிய பிரித்தானிய அமெரிக்கப் போர் வீரர்களைப் பாராட்டி உருசியத் தலைவர் 'ஸ்டாலின்' கூறிய வுரைகள் உளங்கொளற்பாலன. ஆங்கிலக் (இங்கிலீஷ்) கால்வாய்களைக் கடந்து பிரித்தானியத் தீவுகளைக் கைப்பற்ற வலிமை மிகுந்த நெப்போலியனாலேயே இயலாமற் போயிற்று. வாயாற் பிதற்றிக் கொண்டிருந்த இட்லர் இரண்டாண்டுகளாக வீண்வீரூப் புப் பேசினரே தவிர அவரால் காரியத்திலிறங்க இயலவில்லை. பிரித்தானிய, அமெரிக்கப் போர் வீரர்கடாம் ஆங்கிலக் கால்வாய்களைக் கடந்து படையெடுத்த புகழைத் தேடிக் கொண்டனர். இச்செயலால் ஒரு பெருங் காரியம் சாதிக்கப்பெற்றதாக வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுவர்." என, ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

—பொழிலாசிரியர்.

சமயவாழ்வு வேண்டுமா?

மதுரை, திருஞானசம்பந்தர் மடத்தைச் சார்ந்த
மறைத்திரு. மாணிக்கவாசகத் தம்பிரான் அவர்கள்.

(முற்றொடர்ச்சி: துணர் உக, மலர் எ, பக்கம் 184).

இத்தகைய மனவமைதி இன்றேல் கடவுள் வணக்கத்தால் பயனில்லை யென்று வழிபாட்டு முறை என்ற நூல் எழுதிய ஆங்கில அறிஞர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய மன வமைதி மனிதனுக்கு முப்பது வயதிற்கு மேல் உண்டாவதாக மனநூல் ஆராய்ந்தவர்களின் கூற்றாகும். அதனால் தான் நூல்கள் எழுதுகின்றவர் களெல்லாம் முப்பது வயதுக்கு மேற்பட்டே எழுத வேண்டுமெனக் குறித்துள்ளனர். உலகில் தோன்றி, பெரிய பெரிய நூல்கள் எழுதியவர்களெல்லாம் தம்முடைய வாழ்க்கையில் பிற்பகுதியிலேயே எழுதியும், பாடல்களைப் பாடியுமிருப்பதை ஆய்ந்து நாம் காண்கின்றோம். ஒரு சிலர் விதி விலக்காக இருக்கலாம்.

ஆகவே மனவமைதிக்குச் சமய வாழ்வே வேண்டப்படுவதாகும் என்பது நன்கு புலனாகின்றது. இத்தகைய வாழ்க்கையைப் புகுத்துவதற்காகவே நம் நாட்டுப் பெரியோர்கள் புராணங்கள், சாத்திரங்கள், மந்திரங்கள், செபங்கள் முதலிய பலவகையான சாதனங்களை அவர் அவர்களின் தகுதிக் கேற்ப ஏற்படுத்தி வைத்தார்கள். அதனால் புராணங்களை நாம் உண்மை நிகழ்ச்சிகளெனக் கொள்ள வேண்டுவதில்லை. அவைகள் குறைந்த தகுதி யுடையவர்கள் சமய வாழ்வை மேற்கொள்ள அமைத்ததொரு சாதனமேயாகும். இப் புராணங்களில் சமய வாழ்வை முறையாக மேற்கொள்ளத்தக்க ஒழுங்கில் அமைந்துள்ளன ஒரு சிலவேயாகும். அவைகள் பெரியபுராணம் போன்றவைகளாகும். பெரிய புராணத்திலுள்ள நாயன்மார்களின் வரலாறுகளெல்லாம் மனித வாழ்க்கையில், ஆராயின், நிகழற்பாலதே. இறைவன் உண்மையைப்பற்றி (Nipola) நிப்போலா என்ற பெரியார் கூறும்போது, அண்டங்கட்கெல்லாம் முதற் காரணமாய் நின்றியக்குவது ஒன்றுண்டு. அவ்வாற்றல் எது என்பதனைத் தம்மால் அறியக்கூடவில்லை என்று கூறியுள்ளார். ஆகையால் ஒருவித ஆராய்ச்சியிலும் ஆழ்ந்து போகாத நாம் அக்கடவுள் உண்மையைப்பற்றி, பிணக்கங் கொள்வதில் யாதொரு பயனுமில்லை. அதை விடுத்து, நமக்கு எண்ணிற்கும் எண்ணிறந்த கடமைகளில் நம்மை நாம் உடைமையாக்கி உழைத்து வருவதே நம்முடைய சிறந்த நல்ல நெறியாகும். இங்ஙனம் மக்களெல்லாம் உணர்ந்து செயலாற்றுவார்களேயாயின் மக்களெல்லாம் மக்களாய் வாழ்வார்களென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

இம் மாணிக்கவாசகத் தம்பிரான் சொற்பொழிவினைத் திரட்டி வெளியிடத் தந்தவர் கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் கழக அமைச்சர் திரு. க. ப. கண்ணன் அவர்கள்.

கொல்லிமலைச் செலவு.

ச. கணபதி, ஆசிரியர், பெருநிலக் கிழவர் உயர்நிலைத் துவக்கப்பள்ளி, துறையூர்.

(முற்றொடர்ச்சி : துணர் 21, மலர் 7, பக்கம் 168)

நீர்வீழ்ச்சியின் தோற்றம் :—

நீர் வீழ்ச்சிக்கு ஐந்நூறடிக்கு இப்பாலேயே கற்பாறையில் விழுந்த வீழ்ச்சியிலிருந்து சிதறிக் கிளம்பிவரும் நீர்த்துளிகள் எங்கள் எதிரே பறந்து வந்து எங்கள்மீது விழுந்து எங்களை இன்புறச் செய்தன. அஃது திருமண வீட்டில் வரும் விருந்தினரை எதிர்கொண்டழைத்து அவர்மேல் பன்னீர் தெளித்து வரவேற்பது போலிருந்தது. நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் செல்லச் செல்ல நீர்த்துளிகள் மிகுந்து காணப்படுவதால் நீர்வீழ்ச்சி தெளிவாகப் புலப்பட்டிலது.

நீர்வீழ்ச்சி ஏறத்தாழ இருநூற்றைம்பது அடிக்குமேல் ஒரு கற்பாறையிலிருந்து 'சோ' என்ற பேரொலியுடன் கீழேயுள்ள ஒரு பெருங் கற்பாறைப் பரப்பில் செங்குத்தாய் விழும் காட்சி மிகவும் அழகியதாகும். நீர் வீழ்ச்சி விழும் இருநூற்றைம்பது அடிஉயரமும் ஒரே பெரிய கருங்கற் பாறைப் பரப்பாகும். அஃது ஒரே நேராய்ச் செங்குத்தாக இருக்கிறது. நீர்விழப் பெரும் கீழ்ப்பரப்பும் ஒரே அகன்ற கருங்கற் பாறையாகும். அக்கற்பரப்பில் நீர் வேகமாக விழுந்து அதன் அருகில் உள்ள நிலத்தைக் குத்திக்கல்லி, அவ்விடத்தை ஒரு பெரிய குளம்போல் ஆக்கியுளது. நாங்கள் அக்குளத்தில் இறங்கி நீராடினோம்.

நீராடல் :—

நானும் என் பாங்காய நண்பரும் கற்பாறைப் பரப்பின் ஓரத்திற்குச் சென்றோம். நீர் வீழ்ச்சிக்கு நேரே செல்ல, நண்பரிடம் தெரிவித்தேன். அங்கு இவ்வாறு உரையாடிக் கொண்டிருந்தபோது, பாறைமீது நீர் விழுந்து உடைந்து கிளம்பிய நீர்ப் பிதிர்வுகள் (நீர்த் துளி) எங்கள் உடலில் மோதி பெருவலியோடு அடித்த அடி, பெருஞ் சூர்வளி யடிக்குங் காலத்து மணற் பாலைவனத்தில் செல்வோர்மீது அவ்வளி நுண்ணறல் மணலை வாரிக்கொணர்ந்து முகத்திலும் உடலிலும் வீசியெறிந்து அடித்த அடி எவ்வாறு உடலில் 'சுள்' ளென்று உறைக்குமோ அதை மான, 'சுள்' ளென்றுபட்டது. இவ்வடிகளை ஏற்றுப் பொறுத்துக்கொண்டு தான் நீர் வீழ்ச்சி செங்குத்தாக விழும் இடத்திற்குச் செல்லவேண்டும். அதுவுமன்றி இடைவிடாது நீர் விழுந்துகொண்டே இருப்பதால் அப்பாறைப் பரப்பும் வழுக்கலா

யுளது. அன்றியும் சமமாக இல்லாது சரிவாகவும் இருக்கிறது. இந் நிலையிற் செல்வதாயின் எச்சரிக்கையாகச் செல்லல்வேண்டும். சிறிது கால் இடறி விழுந்தால் கருங்கல்லில் மோதிக் கொள்ளவேண்டும்; அதற்குமேல் பெருங் காய மேற்படுவதன்றியும் எலும்புகளும் சுக்கு நூருக முறிந்து அவைகளும் அவண் தங்காவகையில் நீரால் உருட்டப் பெற்றுக் குளத்தில் தள்ளப்பெறும். இவ்வளவு இடுக்கண்களையும் கடந்து நின்ருல் நேரே செங்குத்தாய் விழும் வீழ்ச்சி நீரில் சென்று தலை காட்டலாம். சிறிது தவறினுல் செல்பவர் தலை தப்பாது. எவ்வாருயினுமாகுக செல்வதே உறுதி என முடிவு செய்துகொண்டு என் ஒரு நண்பரோடு கிளம்பிச் சென்றேன். வழுக்கலான சரிவுப் பாறையாகையால் மெதுவாகக் குப்புறக் குனிந்து, பாறையின் சிறு வெடிப்புகளில் காலை ஊன்றிக்கொண்டு கையையும் பாறையின் மேற் பரப்பில் ஊன்றி மெதுவாக இரண்டையும் நகர்த்திச் சென்று கொண்டிருந்தேன். என் நண்பரோ நீர் வந்து விழுந்த வேகத்தால் துவக்கத்திலேயே கீழே தள்ளப்பட்டார். ஆனுல் காயமில்லை. அப் பாறையிலிருந்து வேகமாக விழும் நீர் அவரைக் குளத்தில் தள்ளி நீர்ப் போக்கில் அடித்துக்கொண்டு சென்றது. இதைக் கண்ணுற்ற என் ஏனைய நண்பரும் நானும் சிறிது மனங்கவன்றேம். அதற்குள் அவர் ஊக்க மேற்கொண்டு தன் முயற்சியால் நீந்தி நீர்ப் போக்கி லிருந்து சிறிது விலகிக் குளத்தின் ஓரத்திற்கு வந்துவிட்டார். பிறகு எங்கள் எல்லோர்க்கும் மனவமைதி ஏற்பட்டது. மேற் கூறிய நிகழ்ச்சியைக் கண்ணுற்ற நான் வீழ்ச்சி நீரிடம் செல்லும் முயற்சியில் சிறிது வீழ்ச்சி யுற்றேன். ஊக்கமெனைப் பிடித்து முன்னுந்தித் தள்ளவும் செலவு முற்பட்டேன். இவ்விடத்தே இறப்பினும் நன்றே வீழ்ச்சியுற்று வீழ்ச்சி செலாது மீள்வதில்லென்று மனத்துட் கொண்டு மெதுவாகச் சென்று தற்காப்பிற்காக அங்குப் போடப்பெற்றிருக்கும் இரும்புக் கம்பியைப் பற்றிக்கொண்டேன். ஆயினும் நீர்த்துளிகள் மிகுதியாகச் சிதறி முகத்தில் வீசுவதால் கட்பார்வை தெளிவாகத் தெரிந்திலது. கம்பியைப்பற்றிய விடத்தும் கூட நீர் வீழ்ச்சி தலைக்கு நேரே விழவில்லை; அப்பால் ஆறடி தொலைவு இருக்கும் கம்பியை நன்ருகப் பற்றிக்கொண்டே சரிவில் களைப்பு, ஊக்கம் எனும் தம்முள் மாறுபட்ட இரு நண்பர்களையே துணையாக என்னுட்கொண்டு சென்றேன். அங்கு தான் நீர் வீழ்ச்சி நேரே பாறையில் விழுகிறது. நீர் வீழ்ச்சியில் நானும் நேரே தலை காட்டலாமென் றெண்ணினேன். களைப்பின் மிகுதியால், வேகமாக விழும் நீர் வீழ்ச்சியால் எங்கே நான் வீழ்ச்சியுறுவேனே என நினைத்தேன். என் நண்பரும், நீர் வீழ்ச்சி நீர் செலின், நீர் வீழ்ச்சி யுறுவீர் என்றனர். நான் அதற்கு அவர்களை நோக்கி நீர்வீழ்ச்சி செல்லும் முயற்சியில் முன்னரே நீர் வீழ்ச்சி யுற்றீர்! இனி நிகழவிருக்கும் என் வீழ்ச்சி குறித்து நீர் மனங் கவலன்மின் என்றேன். நீர் வீழ்ச்சிக்கும் எனக்கும் உள்ள தொலைவு ஏறத்தாழ இரண்டடிதானிருக்கும். அது விழும் வேகத்தைக் கண்டு செல்லும் முயற்சியில் பின் வாங்கினேன்; ஊக்கம் எனைமுன் பிடித்துத் துரத்திற்று. இடுக்கண்கள் நிறைந்த அவ்விடத்தில்

இருவர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இறுதியில் நானே வென்றேன். ஏறிய முறையே இறங்கி என் நண்பர் உள்ள இடத்திற்கு வந்தேன். இதுகாறும் என் நண்பரும் ஏனையரும் எனை இமைகொட்டாது பார்த்துக்கொண்டே யிருந்தார்கள்; எனை வியந்தார்கள். நான் வீழ்ச்சியுறாது நீர் வீழ்ச்சி சென்று வந்தது எனக்கே வியப்பைத் தருகின்றதெனில் அவர் வியப்புற்றதில் வியப்பென்னை யுளது.

ஆகாய கங்கை (வான் நீர்) தோன்றுமிடம் :—

இந்நீர்வீழ்ச்சி அறப்பளியீசர் மலைக்கு ஏழு கல் தொலைவுக்கு அப்பால் கொல்லி மலையின் தென்மேற்கு மூலையிலுள்ள ஏறத்தாழ கடல் மட்டத்திற்கு நான்காயிரத்து ஐந்நூறு அடிக்கு மேல் உள்ள சித்தன்குட்டு என்னும் உச்சியின் சருவிலுள்ள பழங்காலத்தில் கொல்லிப்பாவை எனவும் இப்போது கொங்காயம்மன் எனவும் பெயர் பெறும் அம்மன்கோயிலை ஒட்டிப் பாறையில் நீர் கசிந்து, அவ்வூற்றுச் சிறிது தொலைவில் அருவியாய் வெள்ளப்பாழி யருவி எனும் பெயருடன் வர, மலையின் நடுப்பகுதி, தென் பகுதிகளிலுள்ள ஏழு நாடுகளிலிருந்தும் வந்து பல அருவிகள் இத்தோடு ஒன்றுயச் சேர்ந்து அறப்பளீசர் அருவி எனப் பெயர் பெறுகிறது. இதே அருவி மீன் துறைப்பள்ளம், நீர்வீழ்ச்சி, கதவடிமூலையாறு, ஐயாறு எனும் பல பெயர்களைப் பல விடங்களில் பெறுகின்றது.

அறப்பளியீசர் கோயிலுக்கு மேல்பால் "மீன் துறைப்பள்ளம்" எனும் பெயரோடு தென்வடலாக ஓடி, சிறிது தொலைவு சென்றதும் கிழக்குத் திசையில் திரும்புகிறது. நான்கைந்து மைல்கள் சென்றதும் ஏறத்தாழ இருநூற்றைம்பது அடி ஆழத்தில் ஒரு பெருங் கற்பரப்பில் விழுகிறது. இவ்விடத்தில் தான் ஆகாய கங்கை எனும் பெயர் பெறுகிறது. பிறகு பழையபடி தென்புறம் திரும்புகிறது. அத் திசையே ஐந்தாறு மைல்கள் பாய்ந்து சென்று ஓரிடத்தில் தென் கிழ்த்திசை திரும்புகிறது. அத்திசையே ஓடி வந்து 'புளியஞ் சோலை' என்னும் அடிவாரத்திலுள்ள 'நாட்டான் மடுவில்' விழுந்து அதற்கு அப்பால் 'ஐயாறு' எனும் பெயர் பெறுகிறது.

ஐயாறு :—

இவ்வாகாய கங்கையில் (1) மாசிமலைஅருவி, (2) தழிகையாறு, (3) நாக்காட்டாறு, (4) கானப்பாடி மூலையாறு, (5) ஆராய்ச்சி ஆறு எனும் ஐந்து ஆறுகள் வந்து சேர்வதால் 'ஐயாறு' எனும் பெயரால் அழைக்கப்படுகிறது. மேற்கூறிய ஐந்து ஆறுகளோடு ஆகாய கங்கை சேர ஆறு ஆறு ஆகிறதே எனின்? ஆகாது. எவ்வாறெனில் தழிகை ஆறு, நாக்காட்டாறு இரண்டும் முதலில் தனித் தனியாக வந்து இடையில் ஒன்றுகி விடுகிறது. ஆகையால் இந்த ஆறு ஒன்று. ஏனைய மூன்று, ஆகாய கங்கை ஒன்று ஆக ஐந்தும் சேர்ந்து 'ஐயாறு' ஆகிறது. மாசிமலை ஆறு மாசி மலையிலும், தழிகை ஆறு மண்மலையிலும் நாக்காட்டாறு, கொல்லிமலை அடிவாரத்திலுள்ள குக்கலாம்பட்டி என்னுமிடத்திலும், கானப்பாடி மூலையாறு பச்சை மலையிலும்,

ஆராய்ச்சி ஆறு கொல்லிமலை அடிவாரத்திலும் தோன்றுகின்றன. இவ்வையாறு தான் பாய்ந்து வரும் முக்கிய இடங்களாகிய கோட்டப் பாளையம், பாலகிருட்டினன்பட்டி, எரகுடி, வடக்குப்பட்டி, கண்ண னூர், தண்டலை, புத்தூர், வேளக்காநத்தம் முதலிய ஊர் நிலங் கட்குப் பாய்ந்து இறுதியில் 'முக்கொம்பு' எனும் இடத்தில் காவிரி யுடன் கலக்கிறது. புளியஞ் சோலையில் இவ்வாற்றிலிருந்து இரு கால்வாய்கள் பிரிந்து ஒன்று ஆலத்துடையான்பட்டி ஏரிக்கும், வேறொன்று வைரிசெட்டிபாளையம் ஏரிக்கும் சென்று பாய்கின்றன. (சம்பேரி.)

மாசிமலை நீர்வீழ்ச்சி :—

இந்நீர்வீழ்ச்சி கொல்லி மலையிலேயே உயரமான ஏறத்தாழ (5000 அடி) ஒரு பகுதியாகிய மாசிமலையில் தோன்றி சிறிது தொலைவு வந்து அம்மலையிலேயே ஓரிடத்தில் மிக உயரத்திலிருந்து ஏறத்தாழ நூறடி பள்ளத்தில் பாறையில் சரிந்தும், குதித்தும் வடதிசையிலிருந்து தெற்குப் புறமாக வந்து ஆகாய கங்கை நீர் வீழ்ச்சியை ஒட்டி, சிறிய வீழ்ச்சியாக விழுகிறது. இம்மாசி மலையில் வைரிசெட்டிபாளையத்தி லிருந்து கொல்லிமலை அடிவாரத்திற்கு வந்து அங்கே ஒரு பேரால மரத்தடியில் சின்னாள் தங்கிப் பின் கொல்லிமலை யேறி மாசிமலைக்கு வந்து 'பெரியண்ணன்' என்ற கறுப்புத் தெய்வம் தங்கி இன்றும் இருக்கிறதாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. அக்கறுப்பு வைரிசெட்டி பாளையத்திலிருந்து மாசிமலைக்கு வந்த வரலாற்றையும், வைரிசெட்டி யாளையத்திற்கு ஏன் அப்பெயர் வந்தது என்ற செய்திகளையும் விரிப்பின் அஃது ஒரு பெருவரலாறாக முடியும் ஆகையால் அவைதமை விடுத்து மேற் செல்வாம்.

நண்பகல் உணவு :—

ஆகாய கங்கையின் (வான் நீரின்) அழகிய தோற்றத்தை யெல்லாம் கண்டு மகிழ்ந்த பின், அந்நீர்வீழ்ச்சியை நீத்து முற் கூற்றுப்படியே இடர்ப்பாடுடைய சரிவுகளின்வழியாக ஏறி அறப்பளி யீசர் கோயிலை அடைந்தோம். உணவு கொள்ளும் காலம் கடந்து விட்டதால் (பிற்பகல் மூன்று மணி) அக்கோயிலுக்கு மேற்கேயும் ஒரு கூப்பீடு தொலைவில் உள்ள 'கோயிலூர்' எனுமூருக்குக் கிழக்கேயும் இரண்டிற்கும் நடுவில் உள்ள ஒரு பரண் வீட்டில் எங்கள் ஆட்கள் உணவு சமைத்திருந்தனர். அவ்விடத்திற்கு உண்ணச் சென்றோம். அனைவரும் உண்டு சிறிதிளைப்பாறி ஏறத் தாழ ஆறுமணிக்குக் கோயிலுக்குச் சென்றோம்.

அறப்பளியீசர் கோயிலும் மலை அன்னையும் :—

அம்மலைமீதிருந்து நாற்புறமும் நன்கு கூர்ந்து எங்கள் கண்ணுக்கு எட்டும் பரப்புவரைப் பார்த்தேம். கம்மென்று ஒரு நறுமணம் வீசிற்று. அம்மணம் நம் அருமைப்புலவர் கூற்றுப்படி 'கோவா மலை ஆர' மரங்களிலிருந்து வீசப்பெற்றதாகும். மணம்வந்ததும் மரங்களை நோக்கினேன். உடனே எனக்கு 'ஆரம் தாழ்ந்த அம்பகட்டுமார்பில்,

சாரல் அருவிப்பயமலைக் கிழவன், ஓரி கொல்லோ வல்லன் கொல்லோ' என்ற அடிகள் நினைவிற்கு வந்தன. நோக்குந் திசையெல்லாம் ஆரமரங்கள் (சந்தனம்) நிறைந்து நின்றன. முதிர் மரங்களை மலைக் காட்டுத்துறை அலுவலாளர்கள் வெட்டி மேற்பட்டைகளைச் சீவி யெடுத்து ஒவ்வொரு மரத்திற்கும் எண்ணிக்கையைப் பொறித்து விடுகிறார்கள். மேற்பட்டைகள் சீவப் பெற்றதால் மரங்கள் வெண்மை நிறம் பெற்றுத் தம் மணத்தைப் பன்மடங்கு மிகுதியாக வெளியிற் கக்கிக் காண்பாரை இன்புறச் செய்கின்றன. கண்ட இடங்களில் இம் மரங்கள் இவ்வாறு சீவிப் போடப் பெற்றிருந்தாலும் ஒன்று கூடக் களவு போவதில்லை. அதன் காரணம் நெருப்பை நாம் கையால் எடுக்கிறோமா? இல்லையே! அதைப் போலத்தான் இம் மரங்களையும் எடுக்க முடியாது. அரசாங்க நெருப்பாகிய ஆணை அனைவரையும் அச்சுறுத்துகிறது. ஒரு ஆர மரத்தை யாரேனும் களவாடிய செயல் கண்டு பிடிக்கப்பட்டால் உடனே அவருக்கு வெண்பொன் ஐந்நூறு அல்லது ஆயிரம் அல்லது ஆறு திங்கள் சிறைக்காவல் விதிக்கப்பெறும் எனும் ஆணை யிருந்து வருவதால் அவ்வாணைக்கு அஞ்சி ஒருவரும் தொடுவதில்லை.

இவ்வார மரங்களன்றியும், கழை (மூங்கில்) நிவந்து ஓங்கி, வானுற வளர்ந்து வளம் பெற்ற சோலைகளும் ஆண்டு நிறைந்து நின்றன. இவைகள் தவிர மந்தியு மறியா மரம் பயில் கொல்லி அடுக்கத்து, வெயில் நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பரில் மழை முகில் தவழ்ந்து என் சிந்தை மகிழ்வை உந்தி யெழுப்பிற்று. இத்தகு வளங்கள் ஆர்ந்து மாண்புற்று விளங்கும் மலையன்னையின் ஒவ்வோர் எழில் உறுப்புக்களும் என் கட்புலனுக்குப் பெரு விருந்தளித்தன. அறப்பளீசர் மலை எம் மலையன்னையின் திருமுகமாகத் திகழ்ந்து நிற்கிறது; அம்மலை மிசைக் கோயில் அன்னையின் மணிமுடி போல மன்னியிருக்கிறது; சிறுமலைக் குவடுகள் அவள் முலைக்குவடாமென உயர்ந்து ஒளிர்கின்றன; வான் காவிரி முதல் வற்றாவருவிகள் பல அவ் வணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போல அணி செய்தமைகின்றன. பேராழ் பள்ளத்தாக்குகள் அல்குற்றடமென, சிறு பள்ளத்தாக்கு அவளது சீர் பெறும் கொப்பூழ் ஆமெனச் சிறப்புற்றுள்ளன. மலையின் நாற்புறச் சரிவு அகழ்களும் வண்ண இடையாய் வாய்ந்துள்ளது. இக்குடவரை சேலம், திருச்சி மாவட்டங்களில் கால் கொண்டு பரந்துளதால் அவ்விரு பரப்பும் செவ்விய குறங்குடைக் காலிரண்டென்னக் கவினுற்று விளங்குகின்றன. இம்மலையே உயர்ந்து பக்கவாட்டில் பரந்து நிற்பதால் பாங்காய் அவை யிருகை போன்றுள்ளன. பல உறுப்புக்களும் பெற்று நிற்கும் எம் மலையன்னை வீறு பெற்ற தோற்றத்தோடு சீர் பெற வீற்றிருந்து விளையாடுகிறாள் நில வன்னையின் நலமுறு மடியில். அம்மலை அன்னை முடியில் அறப்பளியீசர் அமர்ந்திருக்கவும், அவர் தம் முடியில் கங்கையைப்போல மங்காதென்றும் இயற்கை அன்னை இருந்து வருகிறாள். இக் கொல்லிமலை அன்னை நில வன்னையின் மகளாகவும், கிழக்குத் தொடர்ச்சி மலையன்னையின் கிளையாக இருப்பதால் அவட்குத் தங்கையாகவும், இம்

மருங்குள ஏனைய மலைமங்கைகட் கெல்லாம் உயர்ந்துளதால் அம் மங்கைகட்கு மூத்தவளாய் எக்காலும் நிலைத்து நிற்கிருள்.

இம் மலையரசியின் அரண்மனைக் கோயிலையும் இவள் வீற்றிருப் பையும் சிறிது கூறுவாம். நாற்புறமும் மலைகள் அடர்ந்து நடுவில் இண்ணம் போல் பள்ளமாய் உளது; அப்பள்ளத்து நடுவில் இவ்வறப் பளிசர் மலை யுளது. சிறந்த ஒரு பேரரசன் தன் நகரின் நாற் புற வெல்லையின் கண்ணும் ஆழ் அகழ் அமைத்துப் பேரரண் எடுத்து அரண்மனைக் கோயிலில் அமர்ந்திருக்கு மாபோல், எம்மலை யன்னையும் நிலவரண், நீரரண், காட்டரண், மலையரண் முதலிய நான்கரண்களும் பெற்று, இயற்கை யன்னையாம் தோழியை எம் மருங்கும் பெற்று மலையில் அமர்ந்து ஆட்சி செய்யும் காட்சி என் அகப்புறக் கண்களுக்குப் பெரு விருந்தளித்தது.

அறப்பளீசர் கோயில்:—

அறப்பளீசர் கோயில் ஒரு சிறு பழங் கோயில் ஆகும். அக் கோயிலிலுள்ள சிவக்குறி (சிவலிங்கம்) முடியின் மேல் வெள்ளி யாலான ஐந்தலை நாகம் தன் படத்தை விரித்துக் கவித்துக் கொண்டி ருக்கிற காட்சி அழகியதாகும். அம்மன் சிலையையும் (கல்) வெள்ளியாற் செய்த அணி கலன்களால் அணி செய்திருந்தனர். கூத்தரசன், முருகன், சத்தி, அப்பர், சம்பந்தர் முதலிய கடவுளர், அடியவர் சிலைகள் பொன்னால் செய்யப்பெற்று ஒரு பால் ஒளிர்ந்து விளங்கின. இக் கோயிலில் எப்போதும் பூசனை செய்பவர் அம்மலை மீதுள்ள ஒரு அந்தணராவர். இவ்வந்தணரின் உரிமை ஊர் (சொந்த ஊர்) இம்மலையடிவாரத்திலிருந்து தெற்கே ஐந்து கல்லுக்கு அப்பால் அமைந்துள 'மேட்டுப்பாளையம்' என்னும் ஊராகும். இவருக்கு அறப்பளீசர் கோயில் பூசனை உதவிக்கு வலப்பூர் நாட்டாண்மைக் காரரின் நான்கு ஆட்கள் துறைக்காரர் என்னும் பெயருடன் உள்ளனர். அவர்கள் வேலை ஈசர் பூசனைக்குப் படையற் சோற்றுக்கு நெற்குற்றல், பூசைக்கு நீர், பூ. கொணர்தல், பொங்குதற்கு விறகு கொணர்தல், பல் வேறிடங்களிலிருந்தும் கோயில் பூசைக்கு வருவோருக்கு விறகு, நீர், அரிசி முதலியன கொடுத்தல், திருமஞ்சனப் பொடி இடித்தல் முதலியனவாகும். இவ்வேலைகளைச் செய்து அர்ச் சகருக்கும், வழி படுவோருக்கும் உதவியாயிருப்பர். இக்கோயிற் பூசை செய்யும் அர்ச்சகருக்கு உரிய ஊர் மேட்டுப்பாளையமாயினும் இவர் மலைமேலேயே கோயிலுக்கு அருகில் தங்குவார். மலையிலுள்ள மலைவாணர் நாடோறும் பல விடங்களிலிருந்து பூசைக்கு வருவர்; கீழ் நாட்டிலிருந்தும் பலப் பல காலத்துப் பற்பலர் பல விடங்களி லிருந்தும் வருவர்; வந்து பூசை நடாத்தி அர்ச்சகருக்கு ஏதாவது வரும்படி கொடுப்பர். நாடோறும் எட்டணாவிற்குக் குறையாமலும், ஒரு வெண் பொன் வரையிலும் கிடைக்குமாம். இவ்வர்ச்சகரின் உறவினர் தாத்தையங்கார்பேட்டை மேட்டூர் முதலிய மலை அடியின் சுற்றுப்புற ஊர்களில் சிதறியிருக்கின்றனர். இவ்வையருடைய குடி வழியில் எவரேனும் ஒருவர் மாறி மாறிப் பூசனை செய்வர். பூசனை

செய்வோர் மலைமீதே யிருப்பர். இக்கோயிலில் நாடோறும் மூன்று காலமும் பூசை நடைபெறுகிறது. இவ்வறப்பளீசர் கோயிலுக்கு மலையின் மேல் பல இடங்களிலும், வைரிசெட்டிபாளையம் முதலிய அடிவார ஊர்களிலும் நிலங்கள் மானியமாக உள்ளன.

அறப்பளீசர் கோயில் கட்டியோர் :—

இக்கோயிலைக் கட்டியவர் பெயர் இன்னதென்று தெரியவில்லை. அங்குள மலையாளிகள் நாய்க்கர் வமிசத்தவர் கட்டியதாகச் சொல்கின்றனர். ஆனால் என் நண்பர் மலைக்காட்டலுவலர் (Forester) ஒருவர் தான் அசாந்தா முதலிய குகைகளில் பல்லவர் சிற்பத்தைப் பார்த்திருப்பதாயும், அதை ஒத்து இக்கோயிலின் முன் பாகத்தில் (நுழைவில்) மூன்று பெரிய ஆட்களின் உருவங்கள் கல்லால் செதுக்கப்பட்டுச் சிற்ப வேலையோடு விளங்குகின்றன என்றும், அவை பல்லவர் உருவம் போல் தோன்றுகின்றனவென்றும், அவ்வுருவச் சிலையைக் கொண்டு பல்லவர்தாம் அக்கோயிலைக் கட்டியிருக்க வேண்டுமென்று தான் கருதுவதாயும்கூறுகிறார். ஆனால் எனக்கு அக்கோயிலின்கட்டிட அமைப்பு, அங்குள்ள கல்வெட்டு முதலியவற்றை நோக்கும்போது பல்லவர் கட்டிய கோயில் போல் தோற்றவில்லை. இது இன்னும் ஆராய்தற்குரியது.

நாங்கள் சென்ற ஆடி பதினெட்டு அன்று மாலை ஏறத்தாழ ஐந்து மணிக்கு அணி செய்யப்பெற்ற ஒரு சிறு தூக்குத்தேர் மிசை இறைவன் உருவைவைத் தணிசெய்து, அக் கோயிலைச் சுற்றி மலைவாணர் தோளிற் சுமந்து தூக்கி வந்தனர். நாங்கள் காலம் தாழ்த்து வந்ததால் இச்செய்தியை ஆண்டுளோர் எமக்கு அறைந்தனர்.

கோயில் தேர் :—

அக்கோயிலுக்கு வெளியே ஒரு இழுதேர் பழுதடைந்த நிலையிலுளது. இதற்கு ஈசன் ஒரு காலத்தில் ஈருயிர்ப் பெண் ஒருத்தியைத் தனக்குப் பலியாக வேண்டியதாயும், அவ் வேண்டுதலை ஒருவரும் நிறைவேற்ருததால் தேர் நெருப்புப்பற்றி ஒரு பக்கம் சிறிது பழுதுற்றதாகவும் நம்பவியலா வரலாறொன்று வழங்கி வருகிறது.

சிற்பவேலை :—

அப்பழுதுறு தேரில் இறைவனின் பத்துப் பிறவி (தசாவதாரம்), மார்க்கண்டன் வரலாறு, சில சிற்றின்பக் காதல் செய்திகள் முதலியன குறித்த சிற்பங்களைக் கண்டேம். அவை பேணுவாரின்றி, கைவிடப் பெற்றிருக்கின்றன, நாங்கள் பழஞ் சிற்பங்கள் இந் நிலையிலிருப்பதை மனதில் உன்னி நனிமிக வருந்தினேம்.

கதிரவன் மறைந்தான். கங்குலும் சூழ்ந்தது. பச்சைப் பசுங்காட்டில் எங்கும் இருட்காடு பரவியிருந்தது. விழாவிற்குவந்த மக்கள் அனைவரும் கூடு நோக்கிப் பறந்து செல்லும் பறவை போல்தாங்கள் தங்கும் பரண் வீடு நோக்கி விரைந்து சென்றனர். நாங்களும் இருள் எங்கே வந்து நம்மைச் சூழ்ந்து கொளப் போகிறதோ வென வெருவிப் பகலில் தங்கிய பரண் வீட்டிற்கு விரைந்தேம்.

இரா உணவு :—

அங்கு வெளியே சிறிது நேரம் தங்கி உரையாடினேம். சமயல் வேலையும் இமைப்பில் முடிந்தது. அனைவரும் உண்டேம். சிறு மழை பெய்தது. நாங்கள் பிற்பகலில் இரு பரண் வீட்டில் தங்கி யிருந்தேம்; கோயிலிலிருந்து யாம் வரு முன்னரே ஒரு பரண் தனிற் சிலர் ஊன்றிக் கொண்டனர். குறைவொன்று மில்லாத எங்கட்கு இப்போது இடக் குறைவு வந்தியைந்தது. இருப்பினும் அக்குறை ஒருவா றொழிந்தது. நாங்கள் எழுவர் மட்டும் இவ் வொரு பரணில் இருந்து கொண்டேம். ஏனையோர் வழிகாட்டி மலைவாணரின் உறவினர் வாழும் ஊராகிய கோயிலூருக்கு அவ் வழிகாட்டிகள் அழைத்துச் செல்ல ஆண்டுச் சென்றனர்.

எங்கள் துயில் :—

அவர் செல்ல நாங்கள் எழுவரும், பேரறையில் நால்வரும் சிற் சிற்றறையில் மூவருமாக, கம்பளி விரிப்பின்மேல் போர்வை போர்த்திப் படுத்துத் துயிலில் ஆழ்ந்தோம். அம்மலையில் குளிர் அதிகம்; அங்குச் செல்வோர் பரணிற் படுத்துக் கம்பளி போர்த்திப் பரண் அடியில் மூட்டம் போட்டுத் தூங்கல் வேண்டும் என்று சிலர் நிலவூரில் சொன்னார். ஆனால் யாம் சென்றிருந்த காலத்து மழை பெய்துங் கூட அத்துணைக் குளிர் இல்லை. காலையில் கதிரவன் கீழ்பால் தோன்றினன். இருள் எனும் பகைவன் வெருவி ஓடினன். வைகுறு போதே கோயிலூர் சென்ற எங்களில் எஞ்சியோர் எம்மிடம் எய்தினர். நாங்களும் எங்கள் இன் துயில் நீத்தோம். எம் ஏனையோர் தாங்கள் கோயிலூரில் இரவில் பெரும்பொழுது துயில் கொளாது மலையவர் கூத்தாட்டைக் கண்டு சிறு பொழுதே துயின்றதாகத் தெரிவித்தனர். அனைவரும் வெளியே போந்துக் காலைக் கடன்களைக் கருதி முடித்துக் கோயிலூர் புக்கு மலையர் நாகரிகங்களை அறிந்தேம். அவை செப்புவதற்கு முன் இப்பரண் அமைப்பை ஒரு சிறிது செப்புவன்.

பரண்வீட் டமைப்பு :—

பரண் வீட்டிற்கு நாற்புறமும் சுவர்கள் மண்ணால் எழுப்பப் பெற்றிருக்கும். சுவர்களில் சுண்ணாம்புபூசப்பெற்று, தூவெண்ணிறமா யிருக்கும். மேற்கூரை வேழம் புல்லால் வேயப்பெற்றிருக்கும். கைவளைகள் மூங்கிற் கழிகளாகும். மூங்கிற் கழிகள் சுவர்களுக்கு அப் பாலும் இரண்டடி நீட்டப்பெற்று, கூரை அதிலும் வேயப்பெற்றுக் கீழ் தணிந்திருக்கும். மேற் கூரைகளை வேய் மரங்களை இணைத்துக் கட்டுவதற்கும் பரண்களிலுள்ள பலகைகளை இணைப்பதற்கும் கயிறுகளாக உதவுவன அம் மலைக்கானிடைப் படர்ந்து கிடக்கும் பசுஞ் சிறு நீள் கொடிகளேயாம். கூரை வெளிப்புறம் சென்று தாழ்ந் திருத்தலின் காரணம், பெரு மழை பெய்தாலும் ஒரு துளி கூட உட்சென்று விழாதிருத்தற்கேயாம்.

(தொடரும்.)

கூத்தராற்றுப்படை

வித்துவான். திரு. கு. சின்னையன் அவர்கள்
கலியாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், தஞ்சை.

கூத்தனொருவனை பரிசில் பெற்றானொருவன் நன்னனிடத்து ஆற்றுப்படுத்தியதாகக் கூத்தாராற்றுப்படை முழுவதும் கூறப் பட்டுள்ளது. தொல்காப்பியப் புறத்திணை யியலில் கூறப்படும் பாடாண்டிணையில்,

"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதரேத்திய துயிலிடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

என்ற சூத்திரத்தில், கூத்தராற்றுப்படைக்கு உதாரணமாக மலைபடு கடாத்துச் செய்யுளையும், மற்றைய பாணராற்றுப்படை, பொருந ராற்றுப்படை, விறலியாற்றுப்படை முதலிய துறைகட்கு உதாரண மாக, புறநானூற்றுப் பாடல்களையும் இளம் பூரணரும், நச்சினார்க் கினியரும் உதாரணமாகக் காட்டியுள்ளார்கள். சேனாவரையரும் (சொல். எச்சவியலில்) இம்மலைபடு கடாத்தைக் கூத்தாராற்றுப்படை யென்றே கூறியிருத்தலின் இப்பாட்டின், துறை கூத்தராற்றுப்படை யாகும். வண்ணமும் தூக்கும் எட்டுச் சுவடியில் இல்லாதிருந் திருக்கலாம். கூத்தராற்றுப்படை என்பது துறை யென்றும், மலை படுகடாம் என்பதே பெயராயின் பத்துப்பாட்டில், சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை யென்பன துறையே பெயராக வந்திருக்கின்றதெனின் கூறுவேன். உயர்ந்தோ ரென்று கூறினால், அவர் கல்வியாலும் உயர்ந்திருக்கலாம், ஒழுக்கத் தாலும் உயர்ந்திருக்கலாம், குலத்தாலும் உயர்ந்திருக்கலாம், இம் மூன்றில் ஒன்றிருப்பவரே உயர்ந்தோர் என்பது போலவே, துறை யாலும், பெயராலும் அந்நூல் நுவலப்படும் பொருட்கேற்பப் பெயர் கூறலாம் என்பதுவே காரணமாதல் வேண்டும். அல்லது முதல், உரி, கரு என்ற முப்பொருள்களில் யாதானு மொருபொருள் ஒரு செய்யுட் கண் வந்துழி, அதனாற்றிணை தோன்றல் போல, துறையாலும் பெயர் விளக்கும் என்று கொள்ளலாம்.

இதில் கூறப்பட்ட இசைக்கருவிகள் :—

முழவு, ஆகுளி, கஞ்சதாளம், கொம்பு, நெடுவங்கியம், குறுந் தூம்பு, குழல், கரடிகை, எல்லரி, ஒரு கண்மாக்கிணை, முதலியன.

கூறும் பொருள் :—

நன்னன் நாட்டிற்கேகும், வழியது நன்மை தீமையும், அங்கு உண்டாம் உணவுகளையும், நாட்டின் சிறப்பியல்களையும், அவன்

ஈகைத்திறனையும் பற்றி விரிவாகக் கூறுகின்றார். நம் வள்ளுவப் பெருந்தகையார் அரசர்க்குரிய அங்கமாகக் கூறும்,

"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என்ற ஆறு அங்கங்களும் இந்நன்னனுக்கு உண்டு என்பதற்கேற்ப, படை வீரர்களது தன்மையும், குடிமக்களது நற்செயல்களும், நிலங்களின் வருவாய் மிகுதியும், அமைச்சரின் அரிய குணங்களும், நட்பினரது பெருமையும், மலையை ஒத்த வலிமையும், உயர்வும் உள்ள அரண் சிறப்பும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவனுடைய செல்வத்திறனைக் கூறும்போது,

"கனிபொழி கானங் கிளையொடு ணீஇய
துணைபறை நிவக்கும் புள்ளினமான
..................சேறீராயின்"

என்று என்று கூறுகின்றார். உலகத்தில் உள்ள மரங்களெல்லாம் பழம் பழுக்கின்றன. அப்பழத்தால் மரத்திற்கு ஏதாயினும் பயனுண்டா? இல்லை. பின் ஏன் வேர் முதலிய கருவிகளால் சத்துப் பொருள்கள் சம்பாதித்து, மரத்தையும் பெருக்கச் செய்து பழம் பழுக்கின்ற தென்றால், பிறர்க்குப் பயன்படும் முறையிலே பழம் பழுத்துப் பயன்படுகின்றது. அதுபோலவே இந்நன்னனும் போர்க்களஞ் சென்று தன் வீரர்கள் துணையாகப் பொருள் தேடுகின்றான். அப்பொருளைத் தான் அனுபவித்து இன்பமுறுதற்காகவா? இல்லை. சூதர், மாகதர், கூத்தர், பாணர், தன் வேனிழற் புலவோர், (வீரர்) புலவர் முதலியவர்கட்கும், இன்னும் பொருளை விரும்பி வரும் யாவர்க்கும் பயன்படும்படியே, திறைதந்த பொருள்களையும், வென்று கொண்ட பொருள்களையும் வைத்திருக்கின்றான்.

சில மரங்களில் பழம் பழுத்தாலும் பிறர்க்கும் பயன்படுவதில்லை. தனக்கும் பயன்படுத்திக் கொள்வதில்லை. அதுபோலச் சில அரசர்கள் நிறைந்த பொருள் வைத்திருந்தும் பயன் படுவதில்லை. அங்ஙனமன்றி மரம் ஒருவர்க்குச் சொந்தமாக இருக்கலாம். கிளை, தழைகளை வெட்டாதிருக்கச் காவலும் இருக்கலாம். ஆனால் பழத்திற்குக் காவலிருக்க மாட்டார்கள். இதுவும் சில மரத்திற்குத் தான் உண்டு. அதுபோலவே இவனிடமிருக்கும் பொருள்கட்கு நிறைந்த காவலுண்டு. நிறைந்த பொருளுக்கு உரிமையாகவும் இருக்கின்றான். இரவலர்கட்குப் பொருள்களைக் கொடுத்தனுப்பற்கு மாத்திரம் காவலில்லை. யாவரும் சென்று பொருள் பெற்று வரலாம். அதனால் யான் பெற்று வந்தேன். நீயும் சென்றால் பெற்று வரலாம் என்ற அரிய கருத்தினை யெல்லாம் உள்ளடக்கிக் கூறியிருக்கின்றார். இதனை நம் வள்ளுவரும்,

"பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்"

என்ற குறட்பாவில் நன்கு கூறியிருக்கின்றார்.

இந்நன்னனுடைய ஈகைத்திறனைக் கூறும்போது,

" தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ னுண்மகி ழிருக்கையும்"

என்று சிறப்பித்துள்ளார். வானத்தில் மேகம் இருண்டு இடித்து மின்னி நீரைப் பொழிகின்றது. இது பல விடங்களில் பரந்து கிடக்கும் நீரைச் சூரியனுகிய கையால், ஆவியாகிய உருவமாக எடுத்துச் சென்று பின் மழையாகப் பெய்கின்றது. மழை தாம் பெய்து விட்டோமோ என்று அமையாது மேலும் மழையைப் பெய்து உலகு புரக்கின்றது. அதுபோலவே இந்நன்னனும், தாம் கொண்ட பொருள்களைப் புகழுநர்க்குக் கொடுத்து, அத்துடன் அமையாது அடிக்கடிக் கொடுத்துக்காப்பாற்றுகின்ருன். மலையில் மழை பெய்தால், அம்மலையிற் கிடக்கும் பொருள்களை வாரிக்கொண்டு நீர் விரைந்து கடல் நோக்கிச் செல்வதுபோல், நன்னன் கொடையாகிய மழையைப் பெய்தலால் அவனிடமுள்ள பொருள்களை வாரிக்கொண்டு விரைந்து என் இல்லம் சேர்கின்றேன். ஆதலின் நீவிரும் சென்று பெற்று வாருங்கள் என்று கூறுகின்ருன். இதனை,

" தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடல்படர்ந் தாங்கு
யாமவண் நின்றும் வருதும்"

என்ற அடிகளில் சிறப்பித்துக் கூறியிருக்கின்ருர்.

மக்களிற் சிலர் வன்நெஞ்சராயும், அல்லாதவராயு மிருக்கின்றனர். நல்லவர்க்கு நன்மை செய்பவராயும், கெட்டவர்க்குத் திங்கு செய்பவராயு மிருக்கின்றனர். இவ்விரு குணங்களும் சேர்ந்திருத்தல் மிக அரிதேயாகும். ஆனல் நம் நன்னன் என்பவன் நல்லவர்கட்கு நல்லவனுயும் அல்லாதவர்கட்குக் கெட்டவனுயுமிருந்தான். புறமுதுகிட்டுப் போவார்களையும், அடைக்கலமெனச் சார்ந்தவர்களையும் காப்பாற்றும் நற்குணம் வாய்ந்தவன். நன்னன்தமர் என்ருலே, எவ்வகைப் பகைமையாயிருந்தாலும், தமர் என்னும் மந்திர மொழியால், பகை யென்னும் பிணி நீங்கிவிடும். இதனை,

" இகழுநர்ப் பிணிக்கு மாற்றலும் புகழுநர்க்
கரசுமுழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு"

என்ற அடிகளில் கூறியிருப்பதும், இக்கருத்தினை புறநானூற்றிற் பாடிய புலவரொருவர்,

" தமரெனின் யாவரும் புகுப அமரெனின்
திங்களு நுழையா எந்திரப் படுபுழை"

என்று சிறப்பித்துக் கூறுவதனுலும் இப்புகழ் நன்கு விளங்கும்.

அரசனென்றிருந்தால் அவனுக்கு பகைவனு மிருப்பான். அப்பகைவனைத் தன் படை வலிமையால் சென்று அடக்கி ஆளுதல் இயல்பு. இக்காலத்தில் அங்ஙனம் அடக்கி ஆட்சி புரிய, இரவிலும் பகலிலும், இயந்திர மூலமாகச் சென்று இன்னல் விளையும் போர் புரிந்து வருகின்ருர்கள். ஆனுலும் நன்னனுக்குப் பகைவனின்றென்றே கூறலாம். இவன் எப்பொழுதும் படை வலிமையுடன் இருக்கின்ருன். இதனுல் இவனேடு மாறுபடுபவர்களும் இருக்கமாட்டார்கள். இரவு பகல் எந்த நேரமாயினும் நன்னனுடைய ஆணை என்று கூறி,

சொல்லும் காரியங்களைத் தட்டாது செய்வார்கள். இதனை விளக்க வேண்டி ஞாயிற்றைப் போல்வான் என்று கூறுகின்றார். அதாவது இருளை நீக்குவதற்கு ஞாயிறு தோன்றுகின்றது. இருளெனும் பகைவனும் இல்லையாய் விடுகின்றான். இரவி மறைந்த பின் இருளாகிய பகைவன் தோன்றுகின்றான். இதனை நீக்குவதற்காகச் ஞாயிற்றினது ஒளியை வாங்கிக்கொண்டு திங்கள் தோன்றி அவ் விருளை நீக்குகின்றது. அதுபோலவே இவன் ஞாயிறு போலவும், இவனிடமிருந்து அதிகாரம் பெற்று வரும் சேனாதிபதி முதலியோர் திங்கள் போலவும் இருந்து இருட்பகைவனை நீக்குகின்றார்கள். இக்கருத்தை மனத்துட் கொண்டே,

"பாயிருள் நீங்கப் பகல்செய்யா வெழுதரும்
ஞாயிறன்ன அவன் வசையில் சிறப்பும்"

என்ற அடியினைக் கூறியிருக்கின்றார்.

அரசனுக்குரிய படை வீரர்கள் பலர் இக்காலத்திலு மிருக்கிறார்கள். இவர்கட்குப் போரில் வென்று முன்னேறிச் செல்வதற்கும் திறமையாகப் பின் நழுவி வருவதற்கும் பழக்கிக் கொடுக்கின்றார்கள். சிலர் வாயளவில் சண்டை யென்பதைக் கேட்டிருப்பார்கள். சிலர் படை வீரர்க்குரிய வேடம் பூண்டிருப்பார்கள். சண்டை செய்து வெல்வதால் வரும் பயன் சிறிதேயாகும். உதாரணமாக, ஒரு குடியானவன் வெள்ளாடொன்று வளர்த்தான். அதற்குத் தினந்தோறும் பல மரங்களினின்றும் தழைகளை வெட்டிப் போட்டு ஆட்டின் உடலில் வலிமை உண்டாகும்படி செய்து வந்தான். ஆடும் தம் தலைவன் தனக்குச் செய்யும் உதவியைக் கருதி மிகவும் உவப்புடன் வளர்ந்து வந்தது. தன்னையே வெட்டித் தின்பதற்கு நினைத்துப் பலியிடு களத்தில் அவ்வாட்டை நிறுத்தி வைத்திருந்தான். முருக பூசை செய்பவன் கழுத்தில் தழைகளாலான மாலைகளை அணிந்திருந்தான். இவ் யாடும் அதனைத் தின்னலாமென்று மகிழ்வோடிருந்தது. உடனே அவ் யாட்டின் மகிழ்ச்சி அற்றுப்போக, அரிவாளெடுத்து அதன் கழுத்தில் வெட்டி வீழ்த்தினான்.

ஆனால் நம் நன்னனுடைய வீரர்களைப் பார்த்தால் இவர் தம் செயல்கட்கு முற்றும் முரண்பாடு கொண்டவர்களாகவே காணப் படுகின்றார்கள். இவர்கள போரில் புறமுதுகு காட்டாதவர்கள். புற முதுகு காட்டி ஓடுபவர்களைச் சென்று கொல்லா உள்ளம் படைத்த வர்கள். அரசனுக்கு வரும் வெற்றியையும், தோல்வியையும் தன் வெற்றி, தோல்வியாகக் கொள்பவர்கள். வென்று கொண்டு வரும் பொருள்களைத் தாமும், தம்மை ஒத்த வீரர்களும், இரவலர்களும், மற்றையோரும் உண்டு களிப்பார்களாதலின், இப்போரில் வீரத்தைக் காட்டுதல் வீரர்கட்கே உரியதாகும். தம் பகைவர் போரிடுவாராயின் அவரைப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்வார்கள். தூசிப்படை. யானைப்படைகளைக்கொன்று குவித்துத் தம் வீரத்தைக்காட்டும் வீரர் களாவார்கள். தமக்குப் பழி வந்த விடத்துத் தம் முயிரையும் விட்டு மானத்தைக் காப்பவர்கள். இக் கருத்தினை மனத்துட் கொண்டே,

"இகந்தன வாயினும் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்

புரைத்தோல் வரைப்பின் வேனிமுற் புலவோர்க்குக்
கொடைக்கட னிறுத்தவவன் தொல்லோர் வரவும்"
... ...
"ஒன்னுத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்"

என்று சிறப்பித்துக் கூறியவற்ருல் நன்கறியலாம். இம் மறவர்கள் சிலர் ஒரு காலத்து, புறமுதுகு காட்டி வர, அதனைக் கண்டு மாற்ருரது வீரர்கள் கைகொட்டிச் சிரித்தார்களாம். அதனைக் கண்ட இவ் வீரர்கள் மானம் பொருது அங்குச் சென்று அவர் தம் முன்பே பொருது இறந்தார்கள். இங்ஙனமான வீரர்களின் பெயரையும், பெருமையையும் எழுதிக் கல் நாட்டியிருக்கின்றது. அக்கல் வாளா இருக்கின்றதா? இல்லை. யாராவது புறமுதுகு காட்டி வருபவர்கள் அவ்வழிச் சென்ருல் அவர்களைப் பார்த்து நகைக்கின்றதாம். இங்ஙனம் நகைக்கும் கற்கள் நட்டுள்ள பாதை யென்று கூறுகின்ருர். இதனை,

.... மறவர்
"செல்லா நல்லிசை பெயரொடு நட்ட
கல்லேசு கவலை எண்ணு மிகப் பலவே"

என்ற அடிகளில் சிறப்பித்துக் கூறுகின்ருர்.

தற்போது நம் நாட்டில் வேற்று நாட்டவர் (ஆரியர்) வந்து தலைமையாய் இருந்தும், அதிகாரிகளாயிருந்தும் பொறுக்க முடியாத் துன்பத்தை விளைவித்துக் கொடுமைகள் பல புரிகின்றனர். இவர் தம் இடையூற்றுக் கஞ்சி நீக்கவும் முடியவில்லை. இதனுல் இடையூறுகள் ஏற்படாது நலம் பெற்று வாழ்ந்து வருதற்கு வேற்று நாட்டிற்குச் சென்று விடலாமா என்று எண்ணுபவர்களும், செல்பவர்களும், சென்றவர்களும் மிகப் பலராயிருக்கின்ருர்கள். நன்னனுடைய நாட்டில் வதிபவர்களோ, தம் நாட்டை விட்டு வேற்று நாடு சென்று வாழலாம் என்பதைக் கனவிலும் நினையாதவர்கள். அரசன் செய்யும் நன்மையால் அகமகிழ்ந்து வாழ்பவர்கள். இவர்களது செல்வப் பெருக்கும் அளவிட முடியாததாகும். மாடங்கள் மேக மண்டலத்தைத் தொடும்படியான உயர்ச்சி யுடையதாக இருக்கும். இக்காலத்தில் சிலர் வீட்டைக் கட்டி வைத்து, நிதியின்றி கடனே கந்தாகக் கொண்டு வாழ்கின்ருர்களே, இவர்கள் நிலை போன்ரு இருந்தார்கள். இல்லை. இல்லை. வீடு எவ்வளவு உயர்தோங்கியதோ அவ்வளவு செல்வமும் வளர்ந்தோங்கி இருந்ததாம். இதனை,

"நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெருஅ விழுப்பெரு நியமத்து
யாறெனக் கிடந்த தெருவிற் சாறென"

என்ற அடிகளால் நன்கு விளக்கி இருக்கின்ருர். இதனுற் பகையின்மையும்; குடியின்ருென்மையும் கூறினருமாம்.

(தொடரும்.)

திருக்குறட் சிறப்பு

திரு. ப. பழநிமுதலியார், தமிழ்விரிவுரையாளர், கரந்தை.

திருக்குறள் தமிழ்ப் பெருமகனுரால் செய்யப்பட்டதாயினும், அஃது உலகப் பொது நூலாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த தினலேயே பல மொழிகளினும் அது மொழி பெயர்க்கப்பட்டு, பல்லோராலும் பயிலப்பட்டு வருகின்றது. தமிழை நன்றாக ஊன்றிக் கற்று இலக்கண நூலும் செய்துள்ள சுவாமிநாத தேசிகர் 'பல்காற் பழகினும் தெரியா வுளவேல் தொல்காப்பியங் திருவள்ளுவர் கோவை மூன்றினும் முழங்கும்' என்றும், பிறிதோர் புலவர் 'கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் குறள் அணுகேம் எங்கெழிலென் ஞாயி றெமக்கு' என்றுங் கூறுவாராயினர். திருவள்ளுவ மாலையில் கபிலர் சிறிய புன்னீர் தன்னிடத்துப் பெரிய பனையின் உருவத்தைக் காட்டுதல் போலப் பல பொருளையும் அடக்கிக் காட்டுகின்ற தென்றும், பரணர், குறளுருவாய் வந்து மால் உலகம் அளந்ததைப் போல வள்ளுவர் குறள் வெண்பாவால் வையத்தார் உள்ளுவன வெல்லாம் அறிந்தா ரென்றுங் கூறினர். மதுரைத் தமிழ் நாகனுர் 'எல்லாப் பொருளும் இதன் பால் உள இதன் பால் இல்லாத எப் பொருளும் இல்லையால்' என்றுங் கூறிய உண்மையைச் சிறிது ஆராய்வோம்.

திருவள்ளுவர், கடவுள் வாழ்த்துக் கூறியுள்ள முறையை நோக்குவோம். இறைவனை, மலர்மிசை ஏகினன், வால்அறிவன், தனக்குவமை இல்லாதான், எண்குணத்தான் எனக் கூறியுள்ளார். இறைவனுக்கு இவர் கூறிய இலக்கணங்கள் எம்மதத்தினராலும், எல்லாக் காலங்களிலும் ஏற்றுக் கொள்ளத் தகுந்ததாக உள்ளது. இவ்வாறு பொதுவாகக் கூறியதே யன்றி, தமிழ் நாட்டில் வாழ்ந்தவ ராகலின் அடியளந்தான், தாமரைக் கண்ணன், உலகியற்றியான் எனச் சிறுபான்மை சிறப்புப் பெயராலுங் கூறியுள்ளார். இறைவனை அடைதற்குப் பற்றற்ற நிலை வேண்டு மென்பார் 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு' எனவுங் கூறியுள்ளார். இறைவனை ஈண்டுப் பற்றற்றான் என்ற சொல்லாற் குறித்துள்ளார்.

இந்நூல், அறத்துப்பால்: பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ், எனவும், பொருட்பால்: அரசியல், அங்கவியல், ஒழிபியல், எனவும் காமத்துப்பால்: களவியல், கற்பியல் எனவும் பிரிக்கப்பட்டிலங்கு கின்றது. இவைகளை யெல்லாம் அறம் பொருள் இன்பம் என முப் பகுப்பினவாக்கலாம். அறம், இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றனைத் தருதலான் முதற்கண்ணும், இம்மை மறுமை என்னும் இரண்டினையே தருதலான் பொருள் அதன் பின்னும், இன்பம் இம்மை ஒன்றினையே பயத்தலான் இறுதியிலும் வைக்கப்பட்டது.

தொல்காப்பியர் ' இன்பமும் பொருளும் அறனும் என்ருங்கு ' என்ருர். அம் முறையைப் பற்றியே வள்ளுவனும் இன்பம் பயப்ப தாய இல்லறத்தை முதற்கண் வைத்தார். 'இல்லறம் நடாத்தி இல்லாளோடு துய்த்த இன்பத்தின் கண்ணே உவர்ப்பு வந்த இறுதிக் காலத்தே தன் மனையாளுந் தானும், தன் மக்களனைவரும் இல்லறத்தை நன்கு நடாத்த இறைவனைச் சிந்தித்து வாழ்நாளைக் கழிக்கும் அதனையே ஆசிரியர் தமிழர் கண்ட துறவு நெறியாகக் கூறியுள்ளார். இல்லறம் ஆற்றிய பின்னர் மேற்கொள்வது துறவு நெறியாகலினுலே இல்லறத்தை அடுத்துத் துறவறம் வைக்கப்பட்டது.

மணிமேகலை, புறநானூறு ஆகியவற்றில் குறள்கள் எடுத்தாளப் படுகின்றன. மணிமேகலையில் ' தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப் பொய்யில் புலவன் பொருளுரை தேருய் ' என வருவதாலும், புற நானூற்றில் ' ஆன் முலை யறுத்த அறனில்லோர்க்கு.........செய்தி கொன்ருேர்க்கு உய்தியில் லென்று அறம் பாடிற்றே ஆயிழை கணவ' என வருவதாலும் இவ்விரு நூல்களுக்கு முன்னமே இவ்விரு புலவர் களும் எடுத்தாளும்படி இந்நூல் சிறப்புறத் திகழ்ந்தது என்பது நன்கு புலனுகின்றது. திருக்குறளின் காலம் கி. மு. 3-ஆம் நூற்ருண்டாக இருக்கலாமென்று ஆராய்ச்சி வல்லுநர் கருதுகின்றனர்.

முதல் நான்கு அதிகாரங்களையும் பாயிரமாக ஆசிரியர் அமைத்த கருத்தை ஆராய்வோம். ' தானலா துலகமில்லை ' என்று திருநாவுக் கரசர் கூறியபடி உலகத்தை இயக்குதற்கு முழுமுதற் றலைவனுக இருப்பவன் இறைவனுகலின் கடவுள் வாழ்த்தை முதற்கண் கூறி ஞர். அவன் தன் அருள் வெளிப்பாடாகிய மழையினுலே உலகியல் நடைபெறுகின்றதாகலின் வான் சிறப்பை அடுத்தும், அவனது அருள் வெளிப்பாட்டை உள்ளவாறு உணரும் தன்மையோர் இருவகைப் பற்றினையும் விடுத்த பெரியோராகலின் நீத்தார் பெருமையை அதன் பின்னரும், அவர்கள் மக்களுக்கு எடுத்து விளக்குவதாய அறத்தை அதன் பின்னருங் கூறினுர். அறத்தின் வழி ஒழுகினுல் பொருளையும், அப்பொருளால் நெறிகொள் சிற்றின்பத்தையும் முடிவில் வீட்டையும் அடைதல் ஒருதலை. பாயிரமாவது நூலின்கண் சொல்லப்படும் பொருளைப் பருப்பொருளாக உணர்த்துவதன்றே. அவ் விலக்கணம் இப் பாயிரத்துள் அமைந்து கிடக்குமாறறிக.

திருக்குறளைச் சிறப்பாக ஒரு நீதி நூல் என்று சொல்லலாம். ' பொச்சாப் பார்க்கில்லை புகழ்மை.........துணிவு ' என்னுங் குறளில் பொச்சாப் பார்க்குப் புகழில்லாமை இந்நீதி நூலுடையார்க்கேயன்றி எவ்வகைப்பட்ட நீதி நூலார்க்கும் ஒப்ப முடிந்தது என்று கூறினுர். பகை யென்னும் பண்பிலதனை.........வேண்டற் பாற்றன்று ' என்னுங் குறளுரையிலும் நீதி நூல் எனச் சுட்டுகின்ருர். பலவகை அறங்களையும் எடுத்து இயம்பினராயினும் கேட்போர் ஐயப்படா வண்ணம் மிகத் தெளிவாகக் கூறுகின்ருர். பின் வருங் குறள்களை நோக்குங்கள் !

'அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை' எனவும், 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' எனவும்' அழுக்காறவா வெகுளி...... அறம்' எனவும் வருங் குறள்களிலே இவை தாம் அறம் எனத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சில நற் செயல்களைச் செய் தலும் அறம், தீச்செயல்களை ஒழித்திருப்பதும் அறம் என்று ஆசிரியர் கூறிய முறை ஏனைய நூல்களில் காணப்பெறுத தொன்று. இதனை ஒட்டியே பின்னர் எழுந்த புறநானூற்றிலும் 'நல்லது செய்தல் ஆற்றீராயினும்.........நெறியுமா ரதுவே' எனக் கூறப்பட்டுள்ளது.

திருக்குறளிலே காணப்படும் அதிகார முறைமை பரிமேலழகர் அமைத்த தொன்றன்று. இந்நூலில் அமைந்துள்ள அதிகார முறைமை பொருளை இனிது விளக்கிச் செல்கின்றது. இல்வாழ்க்கை என்னும் அதிகாரத் திறுதியிலே 'மங்கல மென்ப மனைமாட்சி......நன் மக்கட் பேறு' என்று கூறி மக்கட்பேறு என்ற அதிகாரத்திற்குத் தோற்று வாய் செய்தார். 'தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்...... நிலனுள்பவர்க்கு' என்று இறை மாட்சியில் கூறி அதனை யடுத்துக் கல்வியைக் கூறினார். வெருவந்த செய்யாமையுள் 'கடுஞ் சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ் செல்வம் நீடின்றி யாங்கே கெடும்' என்று கூறி, அதனை யடுத்து, கண்ணோட்டம் என்னும் அதிகாரத்தை வைத்தார். பத்தழகினுள் ஒத்து முறை என்பது ஒன்றாகும். அம் முறை பற்றி அதிகாரத்தை அமைத்துள்ளார். 'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந் தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்' என்று கூறியபடி நிரல்பட இனிதே சொல்லியிருக்கின்றா ராதலின் உலகம் அவர் மொழியை விரும்பி ஏற்றுக் கொள்கிறது. ஒவ்வொரு பொருளையும் பப்பத்துக் குறள்களால் கூறிச் செல்லுகின்றபடியால், எல்லாப் பொருளையும் கூறமுடியாது. பத்துக் குறள்களில் உணர்த்த முடியாவிட்டால் அதனை எதிர்மறையானுங் கூறத் தொடங்குவார். கல்வி என்னும் பொருளைப் பற்றிப் பத்துக்குறள்களான் விரித்துக் கூற முடியாமை யினாலேயே கல்லாமையின் இழிவை உணர்த்துவதன் மூலமாகவும் கல்விச் சிறப்பை உணர்த்த இயலுமாகையி னாலே அவ்வாறு கூறினார். செங்கோன்மையை அடுத்துக் கொடுங் கோன்மையை வைத்ததும் மேற் கூறியது போன்றதே. ஒன்று கூறும் போது அதனோ டியைபுடையதனையும் கூறுவார். அவற்றிற்குச் சில உதாரணங்களைக் காண்போம். 'நல்லா றெனினுங் கொளல் தீது.........நன்று, ஈதலைப் பற்றிச் சொல்லுபவர் மேலுலகம் இல் லெனினும் ஈதலே நன்று என்று மட்டுஞ் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லாது கொள்ளலின் திமையையும் உடன் கூறினார். வினைத் தூய்மையில் 'எற்றென் றிரங்குவ செய்யற்க" என்று கூறியதோ டமையாது, செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று என்று வினைத் தூயாரது செயலையும் உடன் கூறினார். செய்ந்நன்றி யறிதலில் 'மறவற்க மாசற்றார் கேண்மை.........நட்பு' துன்பத்துட் துப்பாயார் நட்பு துறவற்க என்பதே எடுத்துக்கொண்ட அதிகாரத்திற் கேற்றது. அதனோடு மாசற்றார் கேண்மை மறவற்க என்றுங் கூறினார். எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி எனச் சிறப்பித்து ஓதப்பட்ட

குறள் வெண்பாவினுல் இவ்வளவு கருத்துக்களையும் அடக்கிச் சொல்ல வேண்டியிருந்ததனுலே ஒன்று கூறும்போது அதற்கு இனமாகவுள்ள மற்றொன்றையுங் கூற வேண்டுவதாயிற்று.

நீதி நூலாசிரியர் நீதியைப் பல்லாற்ருன் எடுத்துச் சொல்வர். அதனைப் பின்பற்றி நடத்தற்குரிய வழி இன்னதென்பதைக் கூருமலும் இருந்து விடுவர். நம் பொய்யாமொழியரோ நீதியையும் அறிவுறுத்தி அதனை அடைதற்குரிய உபாயத்தையுங் கூறுகின்ருர். அருளுடையனுதலின் இன்றியமையாமையைக் கூறி, உன்னிலும் வலியார் உன்னை வருத்த வரும்போது நீ எவ்வாறு நடுங்குகின்ருய். அதனை யோசித்துப்பார், உனக்கு அருள் பிறக்கும் என்று அவர் அருளுடையனுதற்குக் கூறும் உபாயம் மிக அழகிதாக இருக்கின்றது. சோர்தலைச் செய்தலின் கெடுதலை விளக்கி அச் சோர்வுடைமையை நீக்கிக் கொள்வதற்குக் கூறும் உபாயங்களை நோக்குங்கள். நீ, வரும் இன்பங்களின் மிகுதியினுலே அம் மகிழ்ச்சியின் கண் அமிழ்ந்து கிடக்கும்போது, தான் செய்ய வேண்டிய காரியங்களை, மகிழ்ச்சியின் கண் ஆழ்ந்து கிடந்ததன் காரணமாகச் செய்யா தொழிந்தவர்கள் கெட்டொழிந்த நிலையை எண்ணுக என்றும், ஒருவன் நினைத்த காரியத்தை நினைத்தவாறே அடைதல் எளிது, மீண்டும் மீண்டுந் தான் முடிக்க வேண்டிய காரியத்தைப் பற்றிச் சோர்தலில்லாது நினைக்கப் பெறுவானுயின் என்றுங் கூறிய உபாயங்கள் உள்ளு தொறும் உவகை பயப்பன.

வள்ளுவர் கூறிய ஒவ்வொரு மொழியை வைத்துக் கொண்டு பிற்காலப் புலவர்கள் பலர் தம் சிந்தனை வன்மையால் பல பாக்களை இயற்றினர். அவற்றுள் சிலவற்றை ஆராய்வோம். 'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள் சிறுகை அளாவியகூழ்' என்று தொகுத்துக் கூறியதைப் பாண்டியன் அறிவுடைநம்பி 'இட்டுந்தொட்டுங் கவ்வியுந் துழந்தும்...விதிர்த்தும்' என்று விளக்கந் தருகின்றனர். 'பண்புடையார்ப் பட்டுண்டுலகம்' என்ருர் நம் வள்ளுவப்பெருந்தகை. "உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்" என்னும் புறப் பாட்டினுள் அமிழ்தத்தையும் தனித்துண்ணுர். ஒன்றிலும் வெறுப்பில்லாதவர். பிறர் அஞ்சுவனவற்றிற்கு அஞ்சிச் சோர்ந்திரார். புகழெனின் உயிரையுங் கொடுத்து நிலை நிறுத்துவார் பழியாயின் உலகொருங்கு வந்தாலுங் கொள்ளார். தமக்கென முயலாப் பிறர்க்குரியாளர் எனப் பண்புடையாரின் இலக்கணங்களை விரித்துக் கூறினர். "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்.........முறை" என்ருர். யார் மாட்டும் என்பதைப் புறநானூற்றில் ஒரு புலவர் விரித்துரைக்கின்ருர். "நமரெனக் கோல் கோடாது பிறரெனக் குணங்கொல்லாது" என்பது அவ்வடியாகும். "வாணிகம்......பிறவுந் தமபோற் செயின்" என்ருர். அதனைப் பட்டினப் பாலையிலே கடியலூர் உருத்திரங் கண்ணனர் கொள்வது மிகைகொளாது கொடுப்பதூஉங் குறை கொடாது வாணிகஞ் செய்யும் வணிகர் என்று விளக்கந் தருகின்ருர்.

வள்ளுவனுர் தீய செய்கைகளைக் கடிந்து கூறிக்கொண்டே வந்து, இறுதியில் மிகக் கடுமையாகவும் இசழ்ந்துரைக்கின்ருர். இங்கே அவருடைய கோபப் பேச்சுக்களைக் காணலாம்.

"செவியிற் சுவை யுணரா.........அவியினும் வாழினும் என்"

"உறின் நட்டு அறின் ஒரூஉம்......பெறினும் இழப்பினும் என்"

"ஒட்டார் பின் சென்ருெருவன்...கெட்டானெனப்படுதல் நன்று"

"தோன்றிற் புகழொடு......தோன்றலின் தோன்ருமை நன்று"

"செய்தேமஞ் சாராச்.........எய்தலின் எய்தாமை நன்று"

"புறங் கூறிப் பொய்த்துயிர்......அறங் கூறும் ஆக்கந் தரும்"

கண்டதைக் கூறல் மெய்யென்றும், காணுததைக் கூறல் பொய் யென்றும் கூருது நன்மை பயப்பதாயின் மெய்யென்றும் தீமை பயப்ப தாயின் பொய் என்றுங் கூறியது ஆராய்ச்சிக்குப் பொருத்தமாக இருக்கின்றது. இதனைப் பரிமேலழகர் இன்னுந் தெளிவாக விரித் துரைக்கின்ருர் தம் உரையில். அஃதாவது நிகழ்ந்தது கூறினல் தீங்கு பயவாத அந்த அளவில் இருந்தால் போதும். நிகழாதது சொன்னல் நன்மை பயக்க வேண்டும். இவை இரண்டும் மெய்யாகும். நிகழாதது சொல்லி நன்மைபயவாமற்போனலும் நிகழ்ந்தது சொல்லி தீமை பயப்பதானலும் இரண்டும் பொய்யே. களவியல் உரையில் தலைவன் தலைவியைக் கொடுப்பாரும் அடுப்பாருமின்றிக் காதலித்தல் தக்கதோ? இதுவுங் களவின்பாற் படுகின்ற தன்றே என்னுங் கடாவிற்கு விடையாகக் களவு நன்மையாதலு முண்டு. யாங்ஙன மெனில் பெண்டாட்டி.........கண்டு கேட்டதற்கு அறியேன் என்று சொல்லி விடுகின்ருன். அது பொய்யாகுமோ. அவள் உயிரைக் காத்ததாகலின் மெய்யாயிற்று. அதுபோல இதுவுந் தீய களவின் பாற் படாது உயர்ந்த ஒழுக்கத்தின் பாற் படுமென்க எனக் கூறி யுள்ளார். அவ்வாறே இன்சொற்கு இலக்கணங் கூறுங்காலும் இனிமையாக உரைப்பது இன்சொல் என்று கூருது, இனிமை யானதாய், அன்போடு கலந்து வஞ்சனை கலவாது, அறத்தினை உணர்ந்தார் வாயினின்றும் வெளி வருவது என்று கூறியது மிகப் பொருத்தமாயிருக்கின்றது. ஏனென்ருல் உள்ளே கொடுமையை வைத்து வெளியில் இனிமையாகப் பேசுபவரை உலகிற் காண்கின்ருே மாகையினலே.

பல அறங்களையும் எடுத்துக் கூறினுராயினும் கேட்போர் இவற்றுட் சிறந்தது யாதோ என்று ஐயமுருதபடியும் கூறுவர். 'யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை......நல்ல பிற' 'பொய்யாமை யன்ன புகழில்லை......பொய்யாமை பொய்யாமை.....நன்று' என்று வாய்மையைச் சிறப்பித்துக் கூறினர். பின்னர், கொல்லாமையிலே 'பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர்......தலை' அறநூலார் தொகுத்தவற்றுள் எல்லாந் தலையாய அறம் கொல்லாமை என்ருர். முன்னே யாம் மெய்யாக் கண்டவற்றுளில்லை என்றும் பிற அறஞ் செய்யாமை செய்யாமை நன்று என்றுங் கூறிக் கொல்லாமை தலையாய

அறம் என்று கூறுகின்றாரே, இதனுள் யாது சிறந்தது என்னும் ஐயம் நிகழுமன்றே. அவ்வையத்தை நீக்குகின்றார். 'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின் சாரப் பொய்யாமை நன்று' என்றார்.

இல்லறத்துள்ளே சில அறங்கள் கூறப்பட்டுள்ளன. துறவறத்துள்ளே சில கூறப்பட்டுள்ளன. இல்லறத்தினுள்ளே சொல்லிய தீவினையச்சத்தைப் போல, துறவறத்திலே இன்னா செய்யாமை கூறுகின்றார். பிறனில் விழையாமை போலக் கூடாவொழுக்கம் கூறுகின்றார். வெஃகாமை போல ஆண்டு, கள்ளாமை கூறுகின்றார். இல்லறத்திற்குச் சொல்லிய அறங்களுள் பொருந்துவன துறவறத்திற்குரியனவே. துறவறத்திற்குச் சொல்லியனவற்றுள் பொருந்துவன இல்லறத்திற்குரியனவே. பொருட்பாலை எடுத்துக் கொண்டோமானால் இறைமாட்சி, ஒற்று, தூது, அரண், படை, வெருவந்த செய்யாமை முதலியன அரசர்க்கே உரியவாம். கல்வி, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், குறிப்பறிதல் முதலியன அரசர்க்கேயன்றி ஏனையோர்க்கும் உரியனவாம்.

சிலர், தமக்கு இன்னா செய்தாரை ஒறுத்தல் வேண்டும் எனவும் பொறுத்தல் வேண்டுமெனவுங் கூறுவர். நாயனாரோ நமக்கு இன்னா செய்தாரை ஒறுப்போமானால் நன்றாகத்தண்டித்தோம் என, தண்டித்த அப்போதைய இன்பமே எண்டாகும். பொறுத்துக்கொண்டால் அது உலகம் உள்ளளவும் புகழைத் தரும் எனவும், பொறுத்துக் கொள்வதோடு அவர்க்கு நன்மையுஞ் செய்து அவர் தீமை செய்ததையும் தான் நன்மை செய்ததையும் மறத்தல் வேண்டுமென்றுங் கூறுகின்றார். தமக்கு நண்பராயினார் தம்மைக் கொல்லுதற் பொருட்டு நஞ்சையே ஊற்றிக் கொடுப்பினும் மறுக்காது உண்ணுதலே நாகரிகத்தின் பண்பு என்றுங் கூறுகின்றார். இவற்றை எல்லாம் நோக்கும் போது தமிழரின் உயர்ந்த உளப் பண்பு தெளிவாக விளங்குகிறது. சினம் மிகக் கொடியது. அதனை அடிக்கடி தன் மாட்டு வருவித்துக் கொள்பவன் இரத்தக்கொதிப்பேறி மாள்வான். அல்லது கோப மிகுதியாலே செய்யத் தகாதன செய்து பின் அதனால் உயிரிழப்பான். இதனை உணர்ந்தே ஆசிரியர் வெகுளாமையில் 'தன்னைத் தான் காக்கிற் சினங் காக்க' என்றும்' இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை எனவுங் கூறியுள்ளார்.

திருக்குறளில் வரும் பல நடை யமைப்புகளை நோக்குவோம். இவர் மிகப் பெரியவர் தான் இன்னவருக்குப் பின்னால் என்று சொல்லும் நடைபோல 'உண்ணாது நோற்பார் பெரியர்......நோற்பாரிற் பின் ' என்றும், ' ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்......பின்' என்றும் வருவன காண்க.

பொதுவுடைமை என்னும் பொருளைப் பற்றி ஒருவர் பேசத் தொடங்குகின்றார் என்று வைத்துக் கொள்வோம். பேசுபவர் பொதுவுடைமை என்பது யாதெனில் என்று எடுத்துக்கொண்ட பொருளை விளக்கத் தொடங்குவார். அதனைப் போலவே ஆசிரியர் பல குறள்களைத் தொடங்குகின்றார்.

'அறவினை யாதெனின் கொல்லாமை'
'அஃகாமை செல்வத்திற்கி யாதெனின்'
'இன்மையின் இன்னாதது யாதெனின்'
'வாய்மை எனப்படுவது யாதெனின்' என வருவன காண்க!

நமக்கு ஒருவன் பகைவனாக இருக்கின்றான் என வைத்துக் கொள்வோம். ஒருவன் நம்மிடம் வந்து உன்னுடைய பகைவனோடு சேர்ந்து கொள்வதனால் பல நன்மைகள் உண்டாகும் என எடுத்தியம்புகின்றான். அப்போது நாம் என்ன கூறுவோம். அவனோடு சேர்ந்து நன்மை யடைதலைக் காட்டிலும் சேராதிருந்து துன்பமடைதல் பத்து மடங்கு நல்லதென்றோ, கோடி மடங்கு நல்லதென்றோ கூறுவோம். இவ்வுலக வழக்கை ஒட்டியே ஆசிரியர் பல குறள்களை அமைத்துள்ளார்.

'பல்லார் பகை கொளலின் பத்தடுத்த தீமைத்தே'
'பேதை பெருங் கெழீஇ நட்பின்.........ஏதின்மை கோடி'
'நகைவகைய ராகிய நட்பின்.........பத்தடுத்த கோடி'
'பழுதெண்ணும் மந்திரியின்.........எழுபது கோடி'
என வருஉங் குறள்களை நோக்குங்கள்.

மிக நல்லனவற்றையோ தீயனவற்றையோ கூறும் போது இது நல்லனவற்றுள்ளும் எல்லாம் நல்லது எனவும், தீயனவற்றுள் எல்லாம் தீய தெனவுங் கூறுவதுண்டு. இவ்வாறு பல குறள்கள் வருகின்றன.

'நன்றென்ற வற்றுள்ளும் நன்றே.........செறிவு'
'அரியவற்றுள் எல்லாம் அரிதே.........கொளல்'
'இன்மையுள் இன்மை விருந்தொரால்.........பொறை'
'பேதைமையுள் எல்லாம் பேதைமை.........செயல்'
'இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்
துன்பத்துள் துன்பங் கெடின்'

திருக்குறளின் அருமையைப் பலரும் அறிய திருக்குறள் வகுப்பு ஒன்று வைத்து நடத்தி வருகின்றார்களே, இவர்களுக்கு இம்மையில் ஏற்படும் புகழ் ஒன்று மட்டுமோ மறுமையில் எல்லையில் பேரின்பத்தையும் அடைவர் என்று அறிஞர் கூறுவர். இதனைப் போன்ற நடையும் பல காணலாம்.

'பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறன்ஒன்றோ'
'பேதைமை ஒன்றோ பெருங்கிழமை.........செயின்'
'பொய்படும் ஒன்றோ புனை பூணும்.........கொளின்'

ஒரு பிறப்பிற் பெற்ற கல்வியும், அடக்கமும், மற்றுமுள்ள நற்செய்கைகளும் ஏழு பிறப்பு வரை தொடரும் என்று நம் வள்ளுவப்

பெருந்தகை கருதியிருந்தனர் என்பதை அவருடைய குறள்களான் அறியலாம்.

'ஒருமையிற்றுன் கற்ற.........எழுமையும்'

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின்.........'

'எழுமை எழு பிறப்பும் உள்ளுவர்.........நட்பு'

'எழு பிறப்புந் தீயவை தீண்டா.........பெறின்'

அவ்வாறே தீவினையும் ஏழு பிறப்பு வரை தொடரும் என்பதை 'ஒருமைச் செயலாற்றும் பேதை.........அளறு' என்னுங் குறளான் அறியலாம்.

உயிரோடிருந்தும் செய்ய வேண்டிய அறம் பொருள் இன்பங் களைச் செய்யாமையாலும், தீவினைகளைச் செய்தலினுலும் இறந்தாராகக் கருதப்படுவார் சிலர் உளர். நற்செய்கைகள் இன்மையினுலே பூமிக்குப் பாரமாக வாழ்நருஞ் சிலர் உளர். மனித வடிவங் கொண்டிருந்தும் மனிதப் பண்பின்மையினுலே பேய்களாக அறிஞர் களால் எண்ணப்படுவோருஞ் சிலர் உளர். இவர்கள் இன்னின்னுர் என வள்ளுவர் நமக்குத் தெரிவிக்கின்றுர். உயிரோடிருந்தும் இறந்தவ ராகக் கருதப்படுவார்கள்.

'வைத்தான் வாய்சான்ற பெரும் பொருள் அஃதுண்.........'

'விளிந்தாரின் வேறல்லர் மன்ற.........'

'இறந்தார் இறந்தார் அனையர்.........துணை'

'ஒத்ததறிவான் உயிர் வாழ்வான்.........'

'வசையொழிய வாழ்வாரே வாழ்வார்'

பூமிக்கு பாரமானவர்கள் :—

'வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா யாக்கை'

'கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல்.........நிலக்குப் பொறை'

'கண்ணேேட்டத்துள்ள துலகியல் அஃதிலார்.........பொறை'

'ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர்.........பொறை'.

மனிதப் பேயர் :—

'அருஞ் செவ்வி.........பேஅய் கண்டன்ன துடைத்து'

'உலகத்தார் உண்டென்ப.........அலகையாய் வைக்கப்படும்'

'பொருளானும் எல்லாம் என்று ஈயாதிவறும்.........பிறப்பு'

அறிவு, ஆண்மை, பெருமை ஆகிய மூன்றும் அரசற்கு இன்றி யமையாது வேண்டப்படுவதாகும். பெருமை, பொருள்படை என இருவகைப்படும். வலியறிதலில் ஆசிரியர் பொருளைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் யாவரும் நினைவில் பதிக்க வேண்டியனவாகும். கொடை யானது சிறந்ததாயினும், புகழை நிறுத்துவதாயினும் பொருள் வருவாய்க் கேற்றவாறு அமைய வேண்டு மென்பதும், பொருள் வரும் வழி சுருங்கினுலும் குற்றமில்லை, செலவிடும் நெறி அதனிற் பெருகா

தாயின் என்றும், அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளது போலத் தோன்றி உண்மையில் அழிந்து விடும் என்றுங் கூறியன பொன் மொழிகளாகும்.

ஆசிரியர் தான் எடுத்துக்கொண்ட கருத்தை மிக எளிய உதாரணங்கொண்டு பிறிது மொழிதல் என்னும் அணி நயம் அமையக் கூறுகின்றார். அரசன், தன்னால் எதிர்க்கப்படுபவர் வலி மிகக் குறைந்தவரே யாயினும் பலர் தொக்கு இருப்பாராயின் அவரை வெல்ல முடியாது. எதிர்க்கும் வலியுடைய அரசன் அழிவான் என்பதனை, 'பீலி ......அச்சிறும் என்று கூறுகின்றார்.' ஒரு அரச னுடைய படை எதிரியினுடைய படையைத் துரத்துகின்றது. எவ்வளவு தூரம் துரத்திச் செல்லலாமோ அவ்வளவு தூரம் துரத்திச் செல்லலாம். அதற்கு மேலே துரத்திச் செல்லலாகாது. அதற்கு மேல் துரத்திச் சென்றால் அது வினை முடிவிற் கேதுவாகாது. அழிவிற் கேதுவாகும் என்பதை 'நுனிக் கொம்பர் ஏறினார், என்னுங் குறளான் அறிவுறுத்துகின்றார்.'

நம் ஆசிரியர் உலகப் பொருள்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் தன்மைகளைக் காட்டி நமக்குப் பல கருத்துக்களை விளக்குகின்றார்.

காக்கை :—

தன்னின் வலிதாய கோட்டானை, பகற்பொழுதின் கண் வெல்லா நிற்கும். அதற்குக் காரணம் காலத்தின் வலியாகும். அது போல அரசர்களும் தமக்கு வலியான காலம் தெரிந்து பகை யரசர்களை வென்று கொள்க வென்றும், காக்கை தமக்கிரையாயின கண்ட வழி சுற்றத்தையும் அழைத்து உண்ணா நிற்கும். அது போல அரசர்களும், மற்றையோரும் தமக்குரிய நலன்களை, சுற்றஞ் சூழ விருந்து அனு பவித்து அவர்களாலாய பயன் கொள்வார்களாக வென்றுங் கூறி யுள்ளார்.

தகர் :—

ஆட்டுக்கடா சண்டையிடுவதை நாம் பார்த்திருக்கின்றோம். அது பின் வாங்குவதைப் பார்க்கின்றோம். உள்ளபடியே அது பின் வாங்குகின்றதா ? இல்லையே; வல்லமையுடன் அன்றோ எதிர்த்துத் தாக்குகின்றது. ஊக்கமுடையவன் ஒடுங்கியிருத்தல் பின் வல்லமை யுடன் எதிர்த்துப் பொருவதற்கே யாகும் எனக் கூறியுள்ளார்.

கொக்கு :—

காலம் பார்த்திருக்குங்கால் அசைவற்றிருக்கும், தான் கருதிய பெரிய மீன் வந்தபோது அது தப்பிப் போகா வண்ணம் விரைந்து குத்தும். அதுபோல காலம் வருந்துணையும் அரசர் காத்திருக்க வேண்டும். எய்தற்கரிய காலம் வந்தபோது அக் காலம் தப்பிப் போகா முன்னமே அச் செய்தற்கரிய செயலைச் செய்து கொள்க என்று கூறுங் குறள் மிக இன்னோசை அமைந்தது. 'கொக் கொக்கக் கூம்பும் பருவத்து—மற்றதன் குத்தொக்க சீர்த்தவிடத்து.'

முதலே :—

முதலே நீரின் கண்ணுயின் தன்னின் வலிய எல்லாப் பிராணி களேயுங் கொல்லும். நீரினின்றும் வெளியே வந்ததாயின் அதனே வலியாற் குறைந்த பிற மிருகங்களும் வெல்லும். இதனே உதாரண மாக எடுத்து எல்லா அரசரும் தம் நிலத்திருப்பாராயின் பிறரை வெல்லும் வலியுற்றிருப்பர். தனக்கு ஆகாத வேற்று நிலத்துச் செல்லின் பிறரால் வெல்லப்படுவர் என்றும் விளக்குகின்ருர். அரணும் பொருள்படை ஆகிய பெருமையும் உடையர் அல்லராயினும் அவர் இருக்கின்ற இடத்திற் சென்று தாக்கக் கூடாது. அவ்வாறு தாக்கின் அவர் தம் இடத்தை விட்டு, போதற்றுணிவினரன்றிச் சாதற் றுணிவினர் ஆவார். ஆதலின் அவர்க்குப் பெரும் படையும் உடையும் என்று கூறினர். இந் நிகழ்ச்சியை உருசியாவின் மீது எடுத்த ஜெர்மனிப் படையெடுப்பால் உணரலாம்.

(தொடரும்.)

வருத்தமும் வேண்டுகோளும்.

மறைத்திரு. மறைமலே அடிகளின் அருமைத் திருமகளாரும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சராயிருந்து காலஞ்சென்ற **வ. திருவரங்கம் பிள்ளே** அவர்களின் வாழ்க்கைத் துணேவியாரும் ஆகிய **திருமதி. நீலாம்பிகை அம்மையார்** அவர்கள் தமது 43-ஆம் அகவையில் இருநுரையீரற்பற்றிய சளிக்காய்ச்சலினுல் 5—11—'45-ஆம் நாள் இறைவன் றிருவடிநீழ லடைந்தார்கள் என்ற செய்தி கேட்டு மிகமிக வருந்துகின்ருேம். தமிழ்நாட்டில் தனித்தமிழ் இயக்கத்திற்கு விதை யூன்றியவர்கள் மறைத்திரு. மறைமலேயடிகளாவார்கள். இவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி வடமொழிச் சொற்களுக்கேற்ற தனித் தமிழ்ச் சொற்களேத் தேர்ந்து ஓர்ந்து பிறர்க்கும் பயன்படுமுறையில் அச்சொற்களே ஒழுங்குபடுத்திச் செந்தமிழ்த் திங்கள் வெளியீடா யிருந்த " செந்தமிழ்ச்செல்வி"யில் வெளியிட்டு வந்தார்கள். இவர்கள் எழுதிய தனித்தமிழ்க் கட்டுரை எலிஜபெத்பிரை பெருமாட்டி முதலிய நூல்கள் கல்லூரி மாணவர்கட்குப் பாடநூல்களாக அமைந்துள்ளன. மற்றும் பலநூல்கள் இவர்களால் யாக்கப்பெற்றுள்ளன. இந்நூல் களும் அறிஞர்களால் போற்றப்பெற்று வருகின்றன. இவர்கள் தமிழ்மொழி பயின்று தமிழிற் சீரிய கூரிய புலமைபெற்றிலங்கிய தோடு தமிழ் முறையில் தமிழ் மணம்புரிந்து ஏனேயோர்க்கு வழி காட்டியாகவும் நின்ருர்கள். தமிழ்நாட்டில் பண்டைக்காலத்திருந்த புலமைத் திருவாட்டிகள் வரிசையில் வைத்தெண்ணத் தகுந்த தமிழ்ப் பெண்மணி இவ்வம்மையாரே யாவார்கள். முறையுறத் தமிழ் பயின்று மூதறிஞரால் போற்றப்பெறும் நூல்களேயாத்து முதன்மை பெற்றிலங்கிய இவ்வம்மையாரால் மேலும் மேலும் பயன்பெறவிருந்த தமிழ்மொழி அப்பயனேப் பெருதொழிந்தது. இவ்வம்மையார் தம் கணவன் பிரிவினேப் பொறுத்து நின்று தந்தையை யிழந்த தம்

குழந்தைகளை வளர்த்துக் கல்வி பயிற்றுவித்து அவர்களைப்போற்றுவாரென எண்ணியிருந்தேம். எட்டு மக்களை ஈன்றெடுத்த தாய் அவ் வெண்மரையும் பிறர் ஓம்புதற்காளாக்கிப் பிரிதல் கொடுமையே யாயினும் இயற்கையின் வன்மையை எங்ஙனந் தடுப்பர்? முன் தம் தந்தையையும் பின் தம் தாயையும் இழந்து வருந்தும் இக் குழந்தைகளைப் புரந்து வளர்க்கும் பொறுப்பு தமிழ் நாட்டைச் சார்ந்தது. தமிழர் நன்றியறிவுள்ளவர்கள். இவ்வம்மையாரும் இவர் தம் கணவரும் தமிழையே நினைந்து தமிழையே எழுதி, தமிழின் தூய்மையையே பேணி வளர்த்தனரே யன்றித் தம் பிள்ளைகட்குரிய இருப்பு நிதி சிறிதும் ஈட்டிவைத்திலர். தம் மக்களை, திக்கற்ற மக்களாகவிட்டுச் சென்ற அவர்களின் நினைவுக் குறியாயுள்ள இம்மக்களைத் தமிழ்நாடு வளர்த்துக் கல்வியளித்துத் தமிழ்த்தொண்டராக்க வேண்டுமென வேண்டுகின்றேம். தமிழ்நாடு இச்செயலாற்றிப் புகழ்கொண்டு திகழத் தமிழன்னை தண்ணருள் புரிவாளாக! இக்குழந்தைகளைப் புரத்தற்கு "நீலாம்பிகையம்மையின் நினைவுநிதி" என ஒருநிதி திரட்டி அந்நிதியைக் கொண்டு இக்குழந்தைகளைப் புரந்துவரும் பொறுப்பைத் தண்டமிழன்பர் திரு. சுப்பையா பிள்ளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டி உதவிபுரிய வேண்டுமெனத் தமிழர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம். இன்றமிழ் மொழிக்கே இன்றொண்டாற்றிய திருமதி. நீலாம்பிகையம்மையின் இன்னுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்புற்றுத்திளைக்க இறைவனை வழுத்தி வணங்கு கின்றோம்.

இங்ஙனம்,
பொழிலாசிரியர்.

கரந்தை, திரு எம்பெருமானுர் தரிசன சபையின் 2, 3 ஆம் ஆண்டு விழாக்கள் 18, 19—8—45 ஆம் நாட்களில் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பெரு மன்றத்தில், திரு. இலா. கோ. சுந்தரராசலு நாயுடு அவர்கள் தலைமையில் திரு. வித்துவான். B. R. புருடோத்தம நாயுடு, ஆ. பூவராகம் பிள்ளை, S. T. சிவிவாசாச்சாரியார், துரையரங்க ராமாநுசதாசர், கோவிந்தசாமி, கிருஷ்ணமூர்த்தி சர்மா அவர்களால் முறையே நால்வர் நடந்த நன்னெறி, செஞ்சொற் கவிகள், திருமங்கை மன்னன் வரலாறும், பாக்களும், (மக்கள் வாழ்க்கைக்கு மதம் முட்டுக் கட்டையா? பாவையின் பண்பு) (மூவரின் முதன்மை, ஆழ்வார், அரசு) வேதாந்தக் கருத்துக்கள் எனும் பொருள்கள் பற்றிச் செவ்விய தமிழ் நடையில் சொற்பொழிவுகள் சிறப்பாக நிகழ்ந்தன.

அச்சபைக்கு இவ்வாண்டிற்குப் புதிதாகச் சபைத்தோன்றலாய திரு. R. சேதுமுதலியார் அவர்களைத் தலைவராகவும், திரு. A.D. இராசமன்னர் நாயுடு அவர்களைத் துணைத் தலைவராகவும் 23—9—45-ல் நடந்த உறுப்பினர் பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் ஒரு மனதுடன் தேர்ந்தெடுத்தனர்.

கோ. இராமாநுசதாசன்,
சபை அமைச்சர்.